திராவிடநாடு

31—5—59 | வார வெளியீடு | விலை 16 காசு

தம்பிக்கு....

-[கா. வேழவேந்தன்]-

விழியிருந்தும் ஒளிகுன்றி துயரச்சேற்றில்
வேதனையை ஒருங்களைந்து வாடும் தம்பி!
குழி பறிக்கும் புது டில்லிக் கொடியின் கீழே
குனிந்ததெலாம் போதுமடா! வறுமை யூரின்
வழிப்பயணம் செய்வதைநீ நிறுத்து! உன்றன்
வழிவருவோர் 'அடிமைகளோ, சீச்சீ!' என்று
பழிதூற்ற வைக்காதே! தேசியத்தின்
பாலத்தைப் பொடியாக்கிக் கடலில் போடு!

இப்புறத்தில் இந்தியொரு தொல்லை! திட்டம்
என்று சொல்லி எதிர்ப்புறத்தில் வரிகள் தொல்லை!
கப்பத்தைத் தவறுமல் கட்டி வந்தும்
கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வழியோ இல்லை!
செப்பாலே உருட்டிவைத்த பொம்மை யெல்லாம்
திருநாட்டின் அமைச்சரென்று எண்ணி வந்தாய்!
அப்பாவித் திராவிடனே! போதும்! செய்த
அழியாத கறைகளுக்குக் கழுவாய் தேடு!

போதுமடா போனவழி தம்பி! உன்றன்
புத்திக்கு வேலைகொடு! இமையைத் தூக்கு!
பாதியிலே வந்தவர்கள் கொழுத்தார்! உன்னைப்
பாடையிலே ஏற்றும்வரை சுரண்டிப் போனர்!
நாதியற்ற திருவிடத்துத் தம்பி! நீயும்
நம்பியது குதிரையல்ல; எலும்புக் கூடு!
ஓதியது போதுமடா! 'தெற்கு வானில்
உதயசூ ரியன்'எழவே வழியைத் தேடு!

தமிழோசை-2

தமிழ்க்குலம்

மகாவித்துவான்

ச. தண்டபாணி (தேசிகர்)

சிங்கப்பூர் 'தமிழ் முரசு' மலர் மூலம் தந்த கருத்து

மொழியும் மக்கள் வாழ்வும், உடலும் உயிரும்போல ஒன்றையொன்று பிணைந்து நிற்பன. வாழ்வில் வளர்வது நாகரிகம். நாகரிகம் வாழ்வியல் நாகரிகமெனவும் அறிவியல் நாகரிகமெனவும் இருவகைப்படும். வாழ்வியல் நாகரிகம் சமுதாய அமைப்பு, இன்றியமையாத தேவைகளைப் பெருக்குவது, அலங்காரத்தை ஆக்குவது என்ற மூன்று கூறுபாடுடையது.

தேவை மனிதனை உருவாக்குகிறது, உயர்த்துகிறது. உழைப்பாளியாக்குகிறது என்பதை உலகம் நன்கறியும். மனிதனுடைய உழைப்பும் உயர்வும் சமுதாய அமைப்பு என்ற அடித்தளத்திலேயே நிலை பெற்றிருக்கின்றன. சமுதாய அமைப்பு அரசியல் பாதுகாப்பிற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் ஒத்ததாக இயற்கையில் அமைந்திருக்க வேண்டும். மக்களிடம் தன்னலமும் தலைமைப் பித்தும்; அறிவுத்துறையில் எழுந்த இறுமாப்பும் வளர வளரச் சமுதாய அமைப்பைத் தங்களுக்கு ஏற்றவாறு தாம் உயரத் தங்கள் இனம் உயர மாற்றி அமைத்துக்கொண்டனர்.

அப்போது, இயற்கைச் சமுதாய அமைப்பு மாறிச் செயற்கைச் சமுதாயச் சீர்கேடு உருவாயிற்று. அது ஒற்றுமைக்கு உலைவைத்தது. அதனால் உளுத்துப்போன சமுதாயம் ஊருக்கு ஒரு சாதிப் பெயரைத் தாங்கித் தலைவிரித்தாடத் தொடங்கிற்று. அதனால் பிரிவே எருவாகக்கொண்டு கோபமும் தாபமும் போட்டியும் பொறாமையும் ஆகிய காப்பு உரங்களைப் பெற்று ஏற்றத் தாழ்வு என்கின்ற நீரால் தன்னலப் பயிர் தழைத்தோங்கி, இன நலம் என்கின்ற நெல் விளைந்து இன்று இனத்தின் பேராலே தேர்தல் — இனத்தின் பேராலே உத்தியோகம். இனத்தின் பேராலே அறிவுத்துறையிலும் கூடப் பாராட்டு என்ற முறையில் உச்சத்தை அடைந்துவிட்டது.

நமது ஆட்சி முறை, பணய முறை, உடை முறை, ஏன்? உணவு முறையுங்கூட மாறியதைப்போல இன்றுள்ள சமுதாய முறையும் மாறினால் ஒற்றுமையான தமிழ்ச் சமுதாயத்தைக் காண முடியும். மாற்றவேண்டுமென்றால் ஏதோ புதிய பாதையில் போவது, ஒருவன் மூளையில் எழுந்த புதிய திட்டங்களை ஏற்பதென்பது கருத்தன்று. இன்று தமிழர் வரலாற்றுக்குத் தொடக்க எல்லையாயிருக்கின்ற தொல்காப்பியர் காலமுதல் சங்க இலக்கிய காலம்வரையில் இருந்த சமுதாய அமைப்பு எப்படி இருந்தது என்பதை இந்த நூல்களைத் துணையாகக் கொண்டு நோக்கி ஆழ்ந்து, ஆய்ந்து நடுநிலையில் காணப்படுகின்ற தமிழர் சமுதாயத்தை இன்றும் கொண்டுவந்தால்; பழம் பெருமையோடு புதுமைச் சாதனை அறிவுகளையும் சார்ந்து கடாரம் முதல் சாவகம் முதலிய தீவுகளிலும், இமயம்முதல் குமரி வரையிலும் வெற்றிக்கொடி நாட்டி ஒன்றே குலம் என்ற இன்ப சமுதாயத்தைக் காணலாம் என்ற எதிர்நோக்கே இக் கட்டுரையின் போக்கு.

தொல்காப்பியர் அறிவை அடிப்படையாகக் கொண்டே முதலில் சாதியை வகுக்கிறார். 'மக்கள் தாமே ஆறறிவுயிர்' என்றவர் 'மாவும் மாக்களும் ஐயறிவினவே' என்று கூறிவைத்தார். இதனால் அறிவை ஆராய்ச்சியினால் வளர்த்து, நல்லன தீயன நாடி, நல்லனகொண்டு அல்லன தள்ளி அமைந்த அறிவுடையவர் மக்கள் என்றும், உண்பதும் உறங்குவதும் இன வளர்ச்சி செய்வதும் ஆகிய முத்தொழிலை உடையாரை மாவோடு சேர்த்து மாக்கள் என்றும் பகுத்தனர். வள்ளுவரும், "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்' "கொலைவினையராகிய மாக்கள்'' "விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல் —கற்றாரோடனையவர்'' என்றும் இப்பகுப்பை நிலைநாட்டுவாராயினர்.

மக்களுடைய அன்றாட வாழ்வு உடலோம்பும் உணவு, உடை முதலியவையாகி, இரண்டை வளர்க்கும் முறையிலேயே தொடங்கிற்று. உணவும் உடையும் உழவுத் தொழிலால் உண்டாவன. ஆதலால் முதல் முதல் தொடங்கிய தொழில் உழவு ஒன்றுதான். இந்தச் சிறப்பை உணர்ந்தே வள்ளுவர் பெருந்தகை எந்தத் தொழிலுக்கும் தனித்த அதிகாரங் கொடுத்துப் பேசாதவர் உழவுக்குத் தனித்த அதிகாரம் வகுத்துச் சிறப்பளித்தார். அம்மட்டோ! உழவரே முதல் முதல் தோன்றிய சமுதாயத்தார் என்பதனையும் தெரிவிக்க உழவார் உலகத்துக்கு ஆணி என்று சொல்லிவைத்தார். உழவுஉழைப்பிலிருந்துவந்தசொல் உழவின் பகுதி உழு. உழைப்பின் பகுதி உழை, இந்த இரண்டிற்கும் வேர்ச் சொல்லினடியில் ஒற்றுமை இருக்கிறது. ஆதலால் முதல் முதல் மனிதன் உழைப்பில் உணர்ச்சியைச் செலுத்தினான். உழைப்பாளியானான். உழவனானான்.

உழைப்பால் வந்த ஊதியம் பெருகியது. ஒன்று ஆயிரமாகப் பெருகுவது உழவின் பயன்.

(4-ம் பக்கம் பார்க்க)

இருந்தும் இல்லாத நிலை!

மலர் 17 ஆண்டுச் சந்தா ரூ. 8. (31—5—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 46

'தொழில் பெருகவேண்டும்; அதுதான் நாட்டு நலனுக்கு நல்லவழிகோலும்' என்பது இன்று உலக நாடுகளில் நிலைத்துவிட்ட உண்மையாகும். தொழில் என்றால் வாழ்வதற்குத் தேவையான தொழில் — வாழ்க்கையில் வளம் கூட்டுவதற்கான வகையில் இருத்தல்வேண்டும். அப்போதுதான் அந்தத் தொழிலால் பயன் இருக்கும். இல்லையேல் உழைப்பு உயர்வுக்குப் பயன்படாமல் உயிரை ஒட்டவைத்துக்கொள்வதற்குத்தான்' பயன்படும்.

தென்னகமும் — குறிப்பாகத் தமிழ்நாடும் இன்று உள்ள நிலையை எண்ணிப்பார்க்கும் போது, தொழில் துறையில் நாம் பெற்றாக வேண்டிய வளர்ச்சி இன்னும் எத்துணையோ பெரியதாகும் என்பது விளங்கும். மற்ற மாநிலங்களோடு நம் மாநிலங்களை ஒப்பிடும் போது, வளத்தால், அந்த வளத்தைப் பயன்படுத்தும் வல்லமையால் நாம் பெரிய செல்வங்களைப் படைத்தவர்கள்தாம்.

அண்மையில் நடைபெற்ற தென்னிந்திய வணிகர் காரோண்டுக் கூட்டத்தில் பேசியபோது டாக்டர் உலோகநாதன் அவர்கள் நமது மாநிலத்தில்,

> "திறமையான தொழிலாளர்களும், நிர்வாகத் திறன் படைத்தோரும் உள்ளனர்"

என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆனாலும் தென்னாடு தொழில் துறையில் பின்தங்கி இருக்கிறது.

இங்கே தொழில் வளர்வதற்கான வாய்ப்புக்கள் ஏராளமாக இருக்கின்றன.

தூத்துக்குடி போன்ற துறைமுகங்களை ஆழப்படுத்தி, விரிவாக்கிக் கடல் வாணிபத்தைப் பெருக்கலாம். சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றலாம். இன்று தொழிலுக்குத் தேவையான நிலக்கரி வடநாட்டிலிருந்து, 1,000 கல் தொலைவுக்கும் அப்பாலிருந்து, வரவழைக்கப்படுவதால் நேரக்கேடும், பண அழிவும் ஏற்பட்டு, செய்தொழிலின் பொருள்விலை கூடிவிடுகின்றது. இதனைக் குறைக்கப் பல வழிகள் உள்ளன. நமது நாட்டில் உழவுதான் பெருந்தொழில் என்றாலும், அதுவும் இலாபம் தரும் வகையில் நடத்தப்பெறவில்லை. சேலம் பகுதியில் இருக்கும் இரும்பைக்கொண்டு உருக்குத் தொழில் தொடங்கினால் உலகப் பெருந்தொழில் நிலையம் ஆகக்கூடும். இவ்வாறு பல்வேறு வகைகளும், வாய்ப்புகளும் இருந்தும் நமது மாநிலமும், திராவிடமும் வளர இயலவில்லை.

ஏன்?

அதைத்தான் நமது கழகம் நாள்தோறும் கேட்கிறது. தென்னாடு வளர வடநாடு விடுவதில்லை. சிறு தொழில்கள் பெருந்தொழில்களாக மாறும் நிலை தெரிந்தால் முளையில் கிள்ளி எறியும் முயற்சியை அவை மேற்கொள்ளுகின்றன. இந்த நிலையை உணர்ந்து தென்னாடு தனித்திருந்தால் உரிமையோடு வளர்ந்து வளம் பெற்று வாழ இயலும் என்று நாம் சொல்கிறோம்.

சென்ற கிழமை கூடிய வணிகர் கூட்டத்தில் டாக்டர் உலோகநாதன் அவர்கள் இதனை வலியுறுத்தும் வகையில் பேசியிருக்கின்றார்.

> தென் இராஜ்ஜியங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிதான் வளப்படுத்தும்.

என்று அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

'வடக்காவது தெற்காவது' என்று 'தூக்கி எறிந்து' பேசுவது வாய்க்குச் சுலபம்; ஆனால் வாழ்க்கைக்குச் சுமை. 'தெற்கு வளர்கிறது' என்று சில்லரைத் தொழில்களைக் காட்டி, வீம்பு பேசுவது வீண்வேலையாவதோடு, நாட்டுக்குச் செய்யும் துரோகமும் ஆகும்.

ஆகையினால் இன்று நாடு இருக்கும் நிலையினைத் தூய்மையோடு எண்ணிப்பார்க்கவேண்டும். கட்சியைக் கடந்து எண்ணிப்பார்க்கவேண்டும். அந்த எண்ணம் பெறுவோர்க்கு ஏக்கம் பிறக்கும், ஏக்கம் ஏற்றம்பெற வழிகோலும்.

வளம் இருக்கிறது,
வல்லமை இருக்கிறது.
ஆனாலும்,
வளர்ச்சி இல்லை.

இதுதான் இன்றைய நிலைமை. ஏன், என்பதை ஆராயும்போதுதான், நாம்சொல்லும் காரணம் உண்மை என்பது தெரியும். அது தெரிந்து தெளிவும் பிறந்தால் நாட்டுக்கு நலம் விரைவில் கிடைக்கும். ★

2-ம் பக்கத் தொடர்ச்சி

"தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய்', என்றார், மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனாரும். பெரிய வளத்தைத் தான்மட்டும் உண்ண முடியுமா? தன்னைச் சார்ந்தவர்க்கும் கொடுத்தான்; ஊருக்குக் கொடுத்தான்; உலகத்திற்கே உதவினான். உழவன் வேளாளனானான். வேளாண்மை உபகாரம். "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பது வள்ளுவர் வேதம். ஆக வேளாளர் சமுதாயம் உபகார உணர்ச்சியினால், உழைப்பை அடிப்படையாகக் கொண்டதனால் அமைந்தது. மக்கள் இனத்துள் முதல் முதல் தோன்றிய சமுதாயம் வேளாளரே என்பது உறுதியாயிற்று.

மிகுந்த பண்டத்தை விற்கத்தானே வேண்டும். மனிதத் தேவை ஒரு பொருளிலா அமைந்திருக்கிறது? வாழ்க்கைக்கு உப்பு முதல் கருப்பூரம் வரையில் தேவைப்படுகின்றனவே. எல்லாவற்றையும் ஒரு மனிதன் அல்லது ஓரூர் உண்டாக்கிக்கொள்ள முடியுமா? பொருள்களின் உற்பத்தி, விளைநிலம் பருவமாற்றம் இவற்றிற்கேற்ப அல்லவா அமைந்திருக்கின்றது. ஆதலால் உப்புழவன் உப்பைக்கொடுத்து நெல் வாங்க வேண்டியதாயிற்று. நெல் உழவன் நெல்லைக் கொடுத்து மிளகை வாங்கவேண்டியதாயிற்று; அதனால் வாணிபம் வளரத்தொடங்கியது. சில மக்கள் இத்தொழிலை மேற்கொண்டார்கள். உழவர்களே சென்று மாற்றிக்கொள்ள முடியாதல்லவா? ஆதலால் உழவரிற் சிலர் வணிகர் ஆயினர். கொண்டு விற்கத் தலைப்பட்டனர். செட்டுப் பிடித்தனர் செட்டிகளாயினர். இவர்கள் அடிக்கடி ஊர் தேசங்களுக்குப் போகத்தொடங்கியதால், தேசியர், சாத்து என்ற பெயர்களையும் அடைந்தனர்.

இப்படி உழவும் வாணிகமும் ஒன்றோடொன்று பிணைந்து வளரத் தொடங்கியபோது நாட்டின் பொருளாதாரம் உயர்ந்தது. அதனால் பொருளைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது அடக்கி ஆளும் உடல் வன்மையும் மன உறுதியும் எல்லோரையும் ஒரு சொல்லிலே கட்டுப்படுத்தும் சொல்லாற்றலும், நாட்டின் நிலையறிந்து காப்பாற்றக்கூடிய நல்லறிவும் பொதுமக்களுடைய எண்ணங்களையும் போக்கையும் நேரிலும் ஒற்றர் மூலமாகவும் மாறு வேடந்தாங்கிச் சென்றும், அறிந்துக்கொள்ளக்கூடிய பொறுமையும் பெருமையும் படைத்த ஆள்வோர் தேவைப்பட்டனர். அப்போது எல்லா இலக்கணங்களும் அமைந்த ஒருவர் அரசரானார். அவருடைய ஆணையின் கீழ் மக்கள் சமுதாயம் நடைபெற்றது. அவர்கள் மக்களிடையே வேற்றுமை நச்சுக் காற்றுப் பரவாமல் பாதுகாத்து வந்தனர். கல்வி நிலையை உயர்த்தினர். உள்நாட்டுப் பகையும் வெளிநாட்டுப் பகையும் வாராமல் காத்தனர். இவ்வாறு அரசரினம் அங்கங்கே அமைவன ஆயின.

இவ்வண்ணம் தொழில் முறையும் தொழிலாலமைகின்ற குணநலங்களும் பற்றியே இனப் பாகுபாடு முதல்முதல் எழுந்தது. அது நாளாவட்டத்தில் முற்றித் தனித்தனியாக அமைந்துவிட்டது. அதிலும் ஓர் சிறந்த காரணம் உண்டு. அந்தந்தத் தொழிலுக்கும் பழக்கம் இன்றியமையாதது. உழவன் தொழிலுக்கு உழத்தி இன்றியமையாதவள். அரசன் தொழிலுக்கு அரசி இன்றியமையாதவள். ஆதலால் தொழில் உபகாரத்தை முன்னிட்டு அந்தந்தத் தொழிலாளிகள் அந்தந்தத் தொழிலில் பழக்கப்பட்ட மகளிரையே இல்லக் கிழத்திகளாக ஏற்றனர். அதனால் இனப் பிரிவினை வலுத்தது. ஆனாலும் அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வான எண்ணம் இருந்ததே இல்லை. மேலும் தொல்காப்பியத்து மணமுறையைப்பற்றிக் கூறும் பகுதிகள் மலை நிலத்துப் பெண்ணை வயல் நிலத்து மன்னர்கள் மணந்தார்கள். மனம் ஒத்த இடத்திலெல்லாம் மணம் நிகழ்ந்தது. **மணத்திற்கு ஆண் பெண்களுடைய அறிவும், கல்வியும், வயதும் காரணமாயினவேயன்றிச் சாதி காரணமாகவில்லை.** சாதி, மனம் ஒத்த மணத்திற்குத் தடையாக இருந்ததும் இல்லை.

தொல்காப்பியத்தில் வாகைத் திணையைப்பற்றிச் சொல்லும்போது பார்ப்பனர் முதலிய நாலு வகை வருணமக்களும் அவர்கள் தொழிலும் கூறப்பட்டிருக்கின்றனவே என்னலாம். அவர்களுக்குக் கூறிய இருபத்து மூன்று தொழில்களுள் பார்ப்பனராகிய அந்தணர்க்கு வேட்பித்தலும், ஈதலும், ஓதுவித்தலும் சிறப்புத் தொழில்கள். அவர்கள் மனப்புலத்தில் அறிவை விதைத்து நினைவைப் பெருக்கி ஞானப் பயிரை வளர்ப்பவர்களாதலின். அவர்கள் கலப்பை தூக்கி உழவோ, போர் செய்யவோ, வாணிபஞ் செய்யவோ முடியாது. அவர்களுக்கு அறிவு வளர்க்கும் அமைதியான பிழைக்கும் வழிகளே தேவை. ஆதலால் படிப்பித்தலும், வேட்பித்தலும், ஏற்றலும் ஆகிய இவை பொருள் வருவாய்க்குரிய சிறந்த வழிகளாயின. ஏற்றவன் கொடுத்துத்தானே ஆகவேண்டும். படித்தவன் தானே படிப்பிக்கமுடியும், ஆகுதி செய்தவன் தானே ஆகுதி செய்விக்க முடியும். ஆதலால் பொருள் வருவாய்க்குரிய சிறப்புத் தொழில்களான ஓதுவித்தல் முதலிய மூன்றிற்கும் ஓதல் முதலிய மூன்றும் பயிற்சித் தொழில்களாயமைந்தன. **இந்தத் தொழில்களை மன உணர்வு வளர்த்த, நினைவுவன்மை பெருகிய, அமைதியான ஆடம்பரமற்ற வாழ்வை விரும்பிய எவனும் மேற்கொள்ளலாம்; அந்தணனாகலாம்.**

அங்ஙனமே அரசர்கள் படை வழங்கியும் குடிகளைப் பாதுகாத்தும் வருவாயைப் பெருக்குவார்கள். அதற்கு அறிவிற்கு ஓதலும், அமைதிக்கு யாகஞ் செய்தலும், புகழையும் பெருமையையுந் தேடி எல்லாரையும் வசப்படுத்த ஈதலும் துணைத் தொழில்களாயமைந்தன. இவற்றை மேற்கொண்ட எவரும் அரசர்களாகலாம். உழவும் வாணிகமும் பசுக்களைப் பாதுகாத்தலும் வணிகர்க்குரிய வருமான வழிகள். படித்தல் அத்தொழிலுக்கேற்ற அடிப்படைப் பயிற்சி. வேட்டலும் ஈதலும் வாழ்வுக்காகப் பொருள்களைப் பங்கீடு செய்யும் வழி.

வேளாளர்க்கு உழவும் ஏனைய தொழில்களும் பொருள் வருவாய்க்குரிய தொழில். உழவுக்காளைகளைப் பாதுகாத்தல் அதற்குரிய துணைத் தொழில். பொதுக் கல்வி கற்றல் தொழில் அறிவுக்கேற்ற துணைத் தொழில். வழிபாடு, பெற்ற பொருள்களைப் பாதுகாக்கவும் பணிவாக இருக்கவும் மேற்கொள்ளப்பெற்ற பயிற்சி, விருந்தோம்பல் உழைத்தபயனை அனைவர்க்கும் உதவும் உபகாரம். இப்படி நால்வகைப் பட்ட அறுவகைப் பக்கங்களையும்

(13-ம் பக்கம் பார்க்க)

சட்டம்-சாணம்

அன்புள்ள எழிலி,

சரித்திரம் படித்திருக்கும் நீ சட்டம் என்றால் என்ன என்று தெரிந்திருப்பாய்—ஒரு நாட்டில் ஒவ்வொரு குடிமகனும், மகளும் செய்யவேண்டிய **கட்டளையின் திட்டம்**தான் சட்டம் — இப்படித்தான் அகராதியில் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு குடியரசு நாட்டிலே சட்டம் எவ்வாறு இயற்றப்பட வேண்டும் என்பதும் நீ அறிந்திருப்பாய்—மக்களின் நன்மைக்காக, மக்களின் ஆதரவுகொண்டு, மக்களால் தீட்டப்படுவதுதான் சட்டம். அப்படித் தீட்டப்பட்ட சட்டம் எக்காலத்திலும் யாராலும் மீறமுடியாத அளவு இருக்கவேண்டும். அதுதான் நாட்டின் நன்மையைக் கோரி இயற்றப்பட்ட சட்டமாகுமே ஒழிய, மற்றவை சட்டங்கள் ஆகா!

இதை நான் ஏன் எழுதுகிறேன் என்று யோசிப்பாய்! ஏனென்றால் இன்று நம் நாட்டில், சட்டம் எந்த அளவுக்கு மதிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளத்தான், எழுதுகிறேன். இன்று நம் காங்கிரஸ் வாதிகள் எந்த அளவுக்கு மதிக்கிறார்கள் என்று நினைக்கும் போது எனக்குச் சாணம்தான் நினைவுக்கு வருகிறது!

எழிலி! நீ சில வீடுகளில், பார்த்திருப்பாய். பெண்டிர் வேண்டிய பொழுது சாணத்தைக் கையால் பிடித்துவைத்து தெய்வம் என்று கும்பிடுவர். ஆனால் அதையே சிறிது நேரம் கழித்து, தெய்வமாக வணங்கிப் பிறகு, விரட்டியாகத் தட்டிவிடுவர். தெய்வமாக உருவாக்கப்பட்ட சாணம் விரட்டியாக மாறுவதுபோல், இன்று சட்டமும் நம் அரசாங்கத்தாரால் தம் விருப்பம்போல் மாற்றப்படுகிறது.

என்ன! சட்டமும் சாணமும் ஒன்றா! அந்த நிலையில் இந்த மாபெரும் அரசாங்கத்தார் என்ன செய்திருப்பார்கள்! சாணம்போல் சட்டத்தையுமா மதிக்கிறார்கள்" என்று நீ யோசிப்பது எனக்கு நன்றாக விளங்குகிறது.

ஆம், எழிலி! நான் உண்மையைத்தான் சொல்லுகிறேனே ஒழிய, பொய் பித்தலாட்டம் பேசவில்லை. நம் இந்திய அரசியல் சட்ட விதிகளுள் ஒன்றாகிய 343-ம் சட்ட விதியைப்பார்.

"யூனியன் ஆட்சித் துறையின் எண்கள் உலக வழக்கு அடிப்படையில் இந்திய அராபிக் எண்களாக இருக்கவேண்டும்."

"யூனியன் தலைவர் விரும்பினால் தேவநகரி எண்களை உலகவழக்காகப் பயன்படுத்தவும் ஆணை பிறப்பிக்கலாம்."

இதுதான் இந்திய அரசியல் சட்டம். அதாவது இந்திய அரசாங்கத்தில் எந்தத் துறையானாலும் அராபிக் எண்கள்தான் உபயோகிக்கவேண்டும்.

ச. இராமலிங்கம், எம். ஏ.,

ஆனால் **தலைவரே விரும்பினால்**, என்று அடுத்து ஒரு விதிவிலக்கும் கூறியிருக்கிறார்கள்.

உண்மையிலேயே 'பரந்த நோக்கும், அகில உலகக் கண்ணோட்டம் உடையவர், உலக வழக்கிலுள்ள அராபிக் எண்களையேதான் விரும்புவார்! இல்லையென்றால், மொழிப்பித்து, இந்திவெறி கொண்டவராக இருந்தால் 'தலைவர் அடுத்த விதிவிலக்கைச் செய்யலாம்.

அந்த விதிவிலக்கைக் கூடக் கூர்ந்து கவனித்தால் நன்றாகத் தெரியும் உனக்கு! தலைவர் விரும்பினால் **தேவநகரி எண்களை உலக வழக்கு எண்களுடன் பயன்படுத்தலாம், உலக வழக்கு எண்களுடன்தான் தேவநகரி எண்களைப் பயன்படுத்த வேண்டுமே ஒழிய, தனியே பயன்படுத்த முடியாது!**

ஆனால் நடந்திருப்பது என்ன! இந்தி வெறியர்கள் செய்திருக்கும் மாற்றம், நம் மந்திரிக்கே ஏமாற்றமும் எரிச்சலும் உண்டாக்கி இருக்கிறது!

இல்லை என்றால் வடக்குக்கு அடிவருடியாக இருக்கும், நம் மந்திரியார் திடீரென்று தன்னையும் மறந்து உண்மையைக் கூறியிருக்க மாட்டார்!

"மத்தியப் பிரதேச மாநிலத்தில் பச்மாரி, நாகபுரி வழியே நேற்று நான் காரில் வந்தேன். வழியில் இருந்த மைல் கற்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை"

பார்த்தாயா எழிலி! மைல் கற்களை, திரு. பக்தவத்சலனார் அவர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. அது சாதாரண அராபிக் மொழியில் இருந்திருந்தால் புரிந்துகொண்டிருப்பார்! அவர் ஒன்றும் படிக்காதவர் அல்லவே! ஆனால் அவர் சொல்கிறார் "என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று.

மேலும் அவர் எரிச்சலுடனும் ஏமாற்றத்துடன் சொல்கிறார்.

"மைல் கற்களில் இருந்த எண்களை மாற்றவேண்டியதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை"

இப்படி மைல் கற்களில் எண்களை அறவே மாற்றியதன் அவசியம் அவருக்கே புரியவில்லையாம். இதை நாமும் ஒத்துக்கொள்வோம் என்றுதான் அவர் நினைக்கிறார்!

சட்டம் காட்டும் விதிவிலக்கு, வேண்டுமென்ருல் தேவநகரி எண்களை அராபிக் எண்களுடன் பயன்படுத்தலாம்.. ஆனல் இங்கு நடந்திருப்பது ஒரு முழு மாற்றம்— அராபிக் எண்களே இல்லை. ஆகவேதான் நம் கனம் மந்திரியார் ஏமாற்றம் அடைந்திருக்கிருர்!

இப்போது தெரிந்து கொண்டாயா எழிலி! சட்டம் எந்த அளவுக்கு நம் நாட்டில் மதிக்கப்படுகிறது என்று! சட்டம் என்ன சொல்லுகிறது! பஞ்சசீலத்தைப் பாருக்குப் புகட்டும் இந்தப் பண்டிதரின் ஆட்சி என்ன செய்கிறது! இப்படிச் சட்டத்தை மீறுவதென்ருல், இவர்களுக்கு ஏன் சட்டம்?

ஆனல் எழிலி! இவர்கள் சட்டத்தை மீறுவதற்கு காரணம் இல்லாமலில்லை! அன்று ஆங்கிலேயனைப் பார்த்து ஆதிக்க வெறியுடன் ஆளுகிருன் என்று சொன்ன அதே காங்கிரஸ்காரர்கள் இன்று தாங்களும் அதே வெறியுடன்தான் ஆளுகிருர்கள்!

இந்தியைத் தேசிய மொழியாக்கி இந்தியாவை இணைத்து ஆள நினைக்கிறது இந்த 'பாரத' சர்க்கார்! இன்று இந்தியை நாடு முழுவதும் பரப்பவேண்டும என்ற ஒரே காரணத்தினுல்தான் இவர்கள் இன்று சட்டத்தையும் மீறத் துணிந்து விட்டார்கள்!

ஒரு நாட்டின் மொழிப் பிரச்சினை மிகவும் சிக்கலானது! சிந்தித்து முடிவுக்கு வரவேண்டியது. இதை யாரும் உணராதவர் அல்லர்.

"அடிக்கும் கைதான் அணைக்கும்" அதே போன்று ஒரு மொழி நாட்டை இணைக்கவோ துண்டாடவோ முடியும் என்று கருத்துப்பட ஒரு பெருந்தலைவர் கூறியிருக்கிருர்.

"மொழிதான் ஒரு நாட்டை இணைக்கவும் அதைப் பிரிக்கவும் சக்தியுடையது. நாம் நம்முடைய மொழிகள் பிரச்சினைகளில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இல்லையென்ருல் நம் நாட்டின் அழிவிற்கே ஆக்கம் தேடுபவர்களாவோம்"

பார்த்தாயா எழிலி! ஒரு மொழி ஒரு நாட்டைப் பிரிக்கவோ இணைக்கவோ சக்தியுடையது. இதை உணர்ந்துதான் கூறியிருக்கிருர் பஞ்சசீலப் பண்டிதர். கூறியிருப்பவர் பண்டிதர்தான்—ஆனல் அவர் ஆட்சியிலேயேதான் இந்த இந்தி வெறியாட்டம் நடக்கிறது!

இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டும்என்று நினைக்கும் இந்தப் பகற் கனவுக்காரர்கள், உண்மையில் அந்த மொழியின் நிலையை அறிந்துகொள்ளவில்லை--தெரிந்து கொள்ளவில்லை— புரிந்துகொள்ளவில்லை.

"யார் பேசுவது சரியான இந்தி" என்று இன்னும் அவர்களுக்குள்ளாகவே சந்தேகம் இருக்கிறது. திரு. தேபர் பேசும் இந்திக்கும், நம் பண்டிதர் பேசும் இந்திக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. இந்தநிலையில் இருக்கும் இந்தியைத் தேசிய மொழியாக மாற்ற நினைக்கிருர்கள் காங்கிரஸ்காரர்கள்.

எந்த மொழியைக் கொண்டு இந்தியா ஒரு தனி நாடாக மாற்ற நினைக்கிருர்களோ, அதே மொழி, நாட்டின் பிரிவினைக்கு அடிப்படையாக மாறப்போவதை இன்னும் அவர்கள் சில நாட்களில் உணரத்தான் போகிருர்கள்.

இந்தியை நம் நாட்டில் திணிக்க முற்படுவோரின் ஒரே காரணம், இன்று இந்தி நாட்டின் நாற்பத்தைந்து சதவீத மக்களால் பேசப்படுகிறதாம்.

ஆனல் நாம் சொல்கிறோம். நம்நாட்டின் பொதுமொழியாக ஆங்கிலமே வேண்டும். அந்த மொழியினுல்தான் நாம் உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று கூறி வருகிறோம். அதற்கு அவர்கள் கூறுவதெல்லாம், ஆங்கிலம் தெரிந்தோர் ஒரு சிலரே என்பதாகும். நம் நாட்டிலேயே படித்தவர்கள் வெகு குறைவுதான், வெளிநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது! ஆனல், படித்து, அரசியலில் புகவோ, அல்லது அரசாங்கத்தில் பணியாற்றவோ திறமையுடையோர் யாவரும் ஆங்கிலம் தெரிந்தவராகத்தான் இருப்பார்கள் என்று நிச்சயம் கூறமுடியும். **"அகில உலகு தொடர்பு கொள்ள ஆங்கிலம் அவசியமானது"** கைத்தொழில்களில் முன்னேற்றமடையவும் நமக்கு ஆங்கில மொழியின் உதவி தேவை.

ஆனல் இந்த இந்தி வெறியர்கள், ஆங்கிலேயனின், புகைவண்டியையும், ஆகாய விமானத்தையும், மற்றும் எல்லாவிதமான ஆயுதங்களையும் உபயோகிக்கும் இவர்கள், ஏனே ஆங்கிலத்தை வெறுக்கிருர்கள்!

இதையெல்லாம் நேரு பண்டிதர் உணராதவர் அல்ல. தெரிந்தும், உணர்ந்தும்தான் நம் பண்டிதர் இந்த இந்தி வெறிக்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கிருர் என்ருல், அதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான் இருக்கவேண்டுமே ஒழிய, வேறொன்றுமில்லை.

என்ன அது என்று தெரிந்து கொள்ள நீ ஆசைப்படுகிருய் என்று எனக்கு நன்ருகத் தெரிகிறது.

தெற்கை வடக்குக்கு அடிமையாக்கவே இந்த வழியைக் கையாளுகிருர்கள், கருணமூர்த்திகள். இந்திய அரசியல் முழுவதும் இந்தியில் நடக்குமாயின் நிச்சயம், நாம் நம் நாட்டையும் மொழியையும் அறவே மறந்து, நாம் எல்லோரும் அவர்கள் கைப்பாவையாகி, பொம்மலாட்டத்தில் காணும் காட்சியைப் போல் அவர்கள் ஆட்ட நாம் ஆட வேண்டும் என்ற நிலை உண்டாகும் என்று அவர்கள் நினைக்கிருர்கள்.

ஆனல் எழிலி! தென்னகத்தோர் தன்மானம் உடையவர்கள்!

(12-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலத்தில் கடிகாரம் என்பதற்கு க்ளாக் என்றும், கைக் கடிகாரத்திற்கு வாட்ச் என்றும் பெயராகும்.

க்ளாக் என்ற சொல் டச்சு மொழியிலிருந்து பிறந்ததாகும், அதற்கு டச்சு மொழியில் 'மணி' என்ற பெயர் இருந்தது, கைக்கடிகாரத்தை முதன் முதல், இரவு முழுதும் கண்விழித்துப் பாராக் கூறும் காவற்காரர்கள் உபயோகித்ததால் அதற்கு வாட்ச் என்ற பெயர் ஏற்பட்டது,

கடிகாரம் 13ம் நூற்ருண்டில் கண்டு பிடிக்கப்பட்டது. கைக்கடிகாரங்கள் 16ம் நூற்ருண்டில் தோன்றின,

முதலில் கடிகாரங்கள் சிறிய பீரோவைப் போன்று பல அடி நீள அகலங்களைக் கொண்டதாய் இருந்தன. முதல் கைக்கடிகாரத்தின் குறுக்களவு ஆறு அங்குலமாகும்.

முதலில் பளு வீழ்ச்சியினுல் கடிகாரங்கள் இயங்கின. ஊசல் குண்டு பொருத்திய கடிகாரங்கள் 17ம் நூற்ருண்டில்தான் தோன்றின, 1656ம் ஆண்டின் கிருத்தியன் ஐகென் என்பவர் முதன் முதலாக ஊசல் குண்டுக் கடிகாரத்தைக் கண்டுபிடித்தார்.

ஊசல்குண்டு இல்லாமல் கடிகாரம் இயங்க பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. அந்த முயற்சிகளின் முடிவாகக் கைக்கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்டது, ஊசல்குண்டுக்குப் பதிலாக மிக மெல்லிய, விறைப்புள்ள மயிரிழைக் கம்பி ஒன்று பொருத்தப்பட்டது.

வேதநாயகம் பிள்ளை

தன் மனைவிக்கு விட்டுச்சென்ற சொத்துக்கள் இரண்டு. கண்ணன்! கண்ணம்மா! குழந்தைகள் மழலை பேசும் தருவாயிலேயே, தன்னை விதவையாக்கிவிட்டு, தந்துசென்ற இரண்டு கண்களை எண்ணற்ற இன்னல்களுக்கு ஆளாகி உழைப்பை முதலாக்கி உணவிட்டு வளர்த்தாள். தணலிலிட்ட மெழுகு போல் அவள் கரைந்தாள் என்றாலும், தாய்மையாலும், தூய தனது வாய்மையாலும் சேய்களைப் பசியோ, பிணியோ தொடாதவாறு காத்தாள். விதவைகளை விட்டகலாத தொல்லைகளும் துயரங்களும் இவளையும் விட்டதில்லை. எனினும் அவள் மனம் பட்டதில்லை. பயங்கரப் பரிசோதனைகளுக்கு இயற்கை அவளை ஆளாக்கியபோதெல்லாம் கண்ணீரின் துணையால் தப்பி இருக்கிறாள். உபசார வார்த்தைகளை உதட்டிலும், விபசாரப் பட்டத்தை உள்ளத்திலும் கொண்டு உறவாடும் 'விபசாரப் பண்ணையின் மிராசுதாரர்கள்' வீசிய வலையில் வீழ்ந்தாளில்லை. இரவிலே குமுறி எழுந்த எண்ணங்களைக் கண்ணீர் விட்டு நனைத்து அதன் கொடுமைகளைக் குறைத்துக்கொண்டாள். காலத்தின் கூரிய பற்சக்கரங்களுக்கிடையிலே சிக்கி வெளிவந்த அவளைக் குணத்தில் தங்கம் என்று எல்லோரும் போற்றினர். தன் சிட்டுகளின் நல்வாழ்விற்காகவே வாழ்ந்த அவள், அவர்களை அறிவாலயங்களுக்கு அனுப்பத் தவறவில்லை. தொட்டியில் உள்ள பூஞ்செடியை விடத் தோட்டத்துக் குப்பை மேட்டில் வளரும் செடி வேகமாகத்தானே வளரும்! பாறை இடுக்குகளிலே காகம் விட்டுச் செல்லும் விதை வேகமாக வேர் விடத் துவங்கிவளர்வது இயற்கைதானே!! ஏழைத்தாயின் அன்பான வார்த்தைகளால் பண்போடு வளரும் கண்ணன்—கண்ணம்மா இருவரின் அறிவுக் கண்களின் ஒளி, ஆசிரியர்களை ஆச்சர்யத்தில் மூழ்கடித்தது. வியர்வையால் அந்தப் பயிர்களை வளர்த்தாள்! கண்ணீர் விட்டுக் காத்தாள். பொட்டோடு பொலிவும் இழந்து, மலரோடு மஞ்சத்தையும் மறந்து, மங்களம் என்ற பெயரோடு மாங்கல்யம் இழந்த கழுத்தோடு காலத்தைக் கடமையால் ஓட்டிவந்தாள் அந்த உத்தமி.

காலம் கைதேர்ந்ததோர் சிற்பி. அழகுக் கலையின் அகராதியே அவன் கையில்தானே உள்ளது. அரும்பை மணமுள்ள மலராக்குவதும், பின்னர் அதனை மண்மேட்டிற்குச் சேர்ப்பதும் காலத்தின் கைத்திறனுக்கோர் சாட்சியாகும். மங்களத்தின் முகத்தில் முதுமையின் கோடுகள்! மழலை பேசும் சிட்டுகள் முகத்தில் இளமையின் எழில்! அவள் கண்களுக்குக் கண்ணாடி தேவைப்பட்டது! அவர்கள் கண்களுக்குக் காந்த ஒளி தேடிவந்தது!! அவள் உடலிலே நளினம், நயனம் எல்லாம் மறைந்தன. அவர்கள் உடலிலே லலிதமெல்லாம் மலிந்தன!

இயற்கை, சிறுகச் சிறுகக் கொண்டுவந்து சேர்க்கும் சிங்காரக் கலை, காலப்போக்கிலே கண்கொள்ளாக் காட்சியாகத் தோன்றுகிறது. இயற்கையெனும் சிற்பி காலமெனும் சிற்றுளி கொண்டு ஞாலத்தில் செய்திடும் ஜாலவித்தையால் கண்ணன் காணக் கவர்ச்சியாய் உருவெடுத்தான். வறுமைக்கும் பொறுமைக்கும் சின்னமான தன் தாய் அருமையாய்ப் பாடுபட்டு வளர்த்திடுவதைக் கண்டு அவனது இளம் உள்ளம் நெகிழ்ந்தது. தன் தாய்க்கு இயன்றவரை உதவி செய்தான். உயர்தர பாடசாலையின் கடைசி வேலியைத் தாண்டினான், என்றாலும், கல்லூரியின் வாயற்படியினுள் நுழைய இயலவில்லை அவனால். 'பல்கலைக் கழகப் படிப்பு' என்று அதனை அழைப்பதைவிட 'பணக்காரப்படிப்பு' என்றழைத்தல் பொருந்தும் என்று அவனது உள்ளம் சொல்லியது. என் செய்வான்? இவனுடன் பயின்ற பலர் பல்கலைக் கழகங்களில் இடந்தேடி அலைந்தபோது, வேலையைத் தேடி இவன் அலைந்தான். இவன் அறியமாட்டான் இவனைப்போல் வேலை தேடுவோர் தொகை, வேலையில் இருப்போரை விட அதிகம் என்று.

கண்ணன் சுற்றிச்சுற்றிச் சோர்ந்தான். இளமையிலிருந்து இவனோடு பழகி வந்த முத்து எனும் மாணவன் இவன் நிலை அறிந்து தன் தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கூட்டுறவு பாங்க் ஒன்றில் வேலை வாங்கித் தந்தான். சிறு வயது முதலே கண்ணன் மீது அன்பும், அக்கறையுங் கொண்ட முத்து, சீமான் வீட்டுப் பிள்ளை. கல்லூரி மாணவன். வேலை கிடைத்ததும் தன் நண்பனுக்கு நன்றிதெரிவித்துவிட்டுக்கண்ணன் இயந்திரமானான். பசுமை நிறைந்த பாவையாக, கனிமொழி பேசும் வண்ணக் கிளியாக வீட்டில் வளர்ந்து வரும் தன் தங்கை கண்ணம்மாவைப் படிக்கவைக்க வேண்டும் என்ற ஆசையால் அவன் தன் வேலையைக் காப்பாற்றி வந்தான்.

கண்ணம்மாள் — வளர்பிறை! தளிர்விட்டுப் படரும பூங்கொடி! நிலா முகத்தழகி. அவளைத்தேடி

கலாப மயிலின் சாயல் வந்தது. அவள் நடப்பதைப்பார்த்து, உயிர் பெற்ற ஓவியமோ என்று ஊரார் பேசினர். சீமான் சிங்காரவேலரின் மகள் **பூங்கோதை** இவளின் நீங்காத நிழலானாள். இருவரும் இணைபிரியாத தோழியராயினர். இணைந்துதான் எங்கும் செல்வர். காண்போர் வியந்தனர். உடன் பழகுவோர் கேலி பேசினர். ஆயினும் அவர்கள் பிரியவில்லை.

இருவரும் அறிவில் மட்டுமல்ல, அழகிலும் போட்டியிட்டனர். கற்பனைக் கவிஞனின் காவியத்தில் வரும் தலைவியை அற்புதக் கலைஞன் ஓவியமாக்கியதுபோல், பூங்கோதை! மாற்று நிறை பொன்னில் வார்த்த சிங்காரச் சிலைபோல் கண்ணம்மா! அழகிய தோகை விரித்தாடும் மயில் ஒன்று! அழகுக்கலைப் போட்டியில் வாகை சூடும் மற்றொன்று! குழலைப் பழிக்கும் குரல் கண்ணம்மாளுக்கு! மழலையின் சுவை கேட்கும் பூங்கோதையின் இசையில்! அம்புலியைப் பழிக்கும் அழகிய அவள் முகத்தில் ஆடும் விழிகள் கூரிய அம்புகள் என்றால், முகிலைக் கிழித்தோடும் மின்னல் இடையாளின் கண்கள் கயல்கள்! முன் வரிசையை மூடி நிற்கும் அவள் அதரம் உதிரம் காட்டும் கண்ணாடியென்றால், இவள் இதழ்கள் பவழங்கள். குறும்புத்தனம் அவள் வார்த்தைகளில் என்றால், இவள் விழிகள் வாள் வீச்சிலேயே இருக்கும்!

கண்ணம்மா வீடு பூங்கோதையின் பொழுதுபோக்கும் இடமாயிற்று. சிங்காரவேலர் மங்களத்திற்கு அண்ணன் ஆனார். மங்களம் பூங்கோதைக்கு அத்தையானாள். இந்தப் பந்தமும் சொந்தமும் பழக்கம் தந்ததேயொழிய வேறில்லை. சைவப்பிள்ளை— சாதாரணப் பிள்ளை! இரண்டிற்கும் இடையில் சாதியெனும் சர்ப்பம் இருந்து வந்தது.

பூங்கோதையின் எழில்மிகு தோற்றத்தைக் கண்ணன் கவனியாமல் இல்லை. கண்ணாரக் கண்டிருக்கிறான் அந்த கலைக்கோயிலை! கனகமழை பொழிவதுபோல் 'கலகல'வெனச் சிரிக்கும் அந்த அழகுக்கலைப் பொருட் காட்சியை சித்திரமாக எழுதித் தன் இதயத்தே வைத்திருந்தான். நித்தம் நித்தம் வந்த அந்தச் சிட்டு அவனைப் பித்தனாக ஆக்கியது. அவன் சித்தமெலாம் அவளானாள்!

பகலவன் கதிர்பட்டால் சிரிக்காத செந்தாமரை இல்லை. அம்புலி ஒளிபட்டால் மலராத அல்லி இல்லை. கார் முகிலும் குளிர் காற்றும் தழுவினால் மழையைத் தடுப்பாரில்லை. பருவமங்கையின் பார்வையும், காளையின் கண் ஒளியும் தழுவினால் 'காதல்' கருத்தரிக்கக் கேட்பானேன். இளமையின் இன்ப நினைவுகளைக் கண்களால்தானே படிக்க முடியும். சிந்தையில் ஊஞ்சலாடும் எண்ணங்களைச் சந்தேகமறக் காட்டும் கண்ணாடிகளாயிற்றே கண்கள். மலரில் மணத்தை எவரும் கொண்டு சேர்ப்பதில்லை; தானாகவே வருகிறது. மல்கோவா கனியானால் மணம் வீசுகிறது! யாரும் அதற்குச் சுவையைத் தருவதில்லை. இயற்கை தரும் 'வரம்' அது! அதேபோல்தான் இளம் உள்ளங்களிலே இன்ப நினைவுகள் சுரக்கின்றன. கண்ணன்— பூங்கோதை இவர்கள் மட்டும் இயற்கைக்கு எப்படி விதிவிலக்காக முடியும்? எரிபொருளும் நீர்பூத்த நெருப்பும் சந்திக்கும் சந்தர்ப்பம் இருந்தால் விளைவைச் சந்தேகிப்பானேன்!

கண்டதும் உண்டாகும் இன்ப நினைவலைகள்மீது நீந்தும் காதலர்கள் அல்ல கண்ணன், பூங்கோதை. அராபிய நாட்டின் அருமையான காதற் காவியங்களை மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டோ, அன்றி அமராவதியின் அருங்காதலன் அம்பிகாபதியின் கதையைக் கேள்வியுற்றோ எண்ணங்களை மாற்றிக் கொண்டவர்கள் அல்ல. பருவம் எனும் பண்பட்ட பூமியிலே 'காதல்' எனும் விதையைக் காலம் பயிரிட்டான். சந்தர்ப்பம் துணை புரிந்தது. சூழ்நிலை ஏதுவாய் இருந்தது. எனவே பட்டுப்போகாது படர்ந்து வந்தது.

(தொடரும்.)



சாவுக்குக் காரணம்?

2

சிறுவை அநுசுயா—மோகனசுந்தரம்

கனகம் பெருவாயில் ஜமீன் கந்தசாமியின் இளைய மகள். ஜமீன் கந்தசாமிக்கு இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு ஆண் மகனும் உண்டு. சென்னையில் உயர்நீதி மன்றத்தில் புகழ்பெற்ற அட்வொகேட் ஜெனரல் முத்தையா அவர்களுக்குத் தனது பெரிய மகள் நீலாம்பிகையைத் திருமணம்செய்து வைத்தார். ஜமீன் கந்தசாமி என்றால் மீஞ்சூர் தாலுக்காவில் அழுத பிள்ளையும் வாய்மூடும். கந்தசாமிக்குச் சுமார் 760 வேலி நிலம் உண்டு. அதில் 300-வேலி நிலத்தில் கரும்பு பயிர். கந்தசாமி கரும்பு பயிர் செய்து ஏராளமாகப் பணம் சேர்த்தார். சொந்தச் சர்க்கரை ஆலையே வைத்திருந்தார்.

ஜமீன் கந்தசாமி ஒன்பதாவது வகுப்புவரைதான் படித்தார். பின்னர் தனது தந்தை பார்த்துவந்த பயிர்வேலைக்கே தன்னை உரிமையாக்கிவிட்டார். ஜமீன் கந்தசாமி தனது மூத்த மகனை எம். ஏ. வரை படிக்கச் செய்தார். மூத்த மகளுக்குப் படிப்பிற்கு ஏற்றவரன் கிடைத்தது. மூத்த மகளுக்குத் தம்பியாகிய பாண்டியன் தந்தையைப் போல் ஆனான். எப்படியோ கல்லூரி வகுப்பை முடித்துவிட்டு நேரே கிராமத்திற்கு வந்து நிலங்களைக் கவனிக்கலானான். காரணம், திடீரென அவன் தந்தை கந்தசாமி காலமானதால், தனக்கு உள்ள இளைய சகோதரியைக் காக்கும் பொறுப்பு பாண்டியனுக்கு ஏற்பட்டது.

பாண்டியன் அன்புள்ளமும் அடக்கமும் உடைய இளைஞன். உழைப்பில் உயர்ந்தவன். பாண்டியன் ஊருக்கு வந்த சில நாட்களிலேயே அவ்வூர் மக்கள் அனைவர் உள்ளத்தையும் கவர்ந்துவிட்டான். பாண்டியனின் ஈர நெஞ்சம் அவனது பண்ணையில் வேலை செய்யும் மக்கள் எல்லோர் உள்ளத்தையும் கவர்ந்தது. ஊர்ப் பண்ணையாட்கள் பாண்டியனிடம் மிக்க அன்புடன் நடந்துகொண்டனர். இவ்வளவுக்கும் காரணம், பண்ணையாட்களின் துன்பத்தைத் தனது துன்பமாகக் கருதி நடந்துவந்தான் பாண்டியன்.

பாண்டியனின் இச்செய்கை சிலருக்கு வெறுப்பாகவும் பொறாமையாகவும் காணப்பட்டது. தாழ்ந்த குல மக்களிடத்தில் இவ்வளவு பரிவும் அன்பும் பாண்டியன் காட்டுவது, தங்களை மேல்சாதிக்காரர்கள் என்று கூறிக்கொள்வோம் சிலருக்கு வெறுப்பாகவே காணப்பட்டது. பாண்டியன் படித்த கல்லூரியில் பேராசிரியர் திரு. வி. க. அவர்கள் தமிழ் ஆசிரியராய் இருந்த காரணத்தாலும், சங்க இலக்கிய நூல்களை அவன் தேர்வுக்காகப் படிக்காமல் அப்பாடல்களில் உள்ள கருத்தாழங்களை சுவைத்துப் படித்த காரணத்தாலும் அவனுக்கு மனித சமூகத்திடையே வேற்றுமை உணர்ச்சி காண முடியவில்லை.

பாண்டியன் தன் எதிரில் உள்ள அனைவரையும் ஒரே இன மக்களாகவே நினைத்தான். வேற்றுமை அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. தான் படித்த தமிழ் இலக்கியங்களில் சாதி வேற்றுமையைப் பற்றியோ, சமய வேற்றுமையைப் பற்றியோ படிக்கவில்லை. இலக்கியம் அல்லாத புராண இதிகாச நூல்களில்தான் சாதி சமய வேற்றுமைகளைப்பற்றிப் படித்திருக்கிறான். “சாதியிலே, மதங்களிலே சமயநெறிகளிலே, சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சுப்பையிலே நீவிர் வீணே அலைந்து அலைந்து திரிதல் அழகல்லவே — “சாதிச் சண்டையும் சமயச் சண்டையும் பிச்சுப்பிள்ளை விளையாட்டே” என்ற இராமலிங்கர் நெறிகளை மிக ஊன்றிப்படித்தவன். ஆகையால் அவனுக்கு மக்கள் கூட்டத்தில் வேறுபாடு தோன்றுவதே இல்லை. சில கிராம மக்கள் தங்களை உடையார் என்றும், பிள்ளைமார் என்றும், முதலியார்கள் என்றும் குறிப்பிடும்போது பாண்டியனுக்கு மனம் வேதனைப்படும். அவர்களுடன் பாண்டியன் நல்லவண்ணம் உரையாடுவதன் மூலம் சில சிறிய கருத்துக்களை விளக்குவான். ‘சாதி இரண்டொழிய வேறில்லை, சாற்றுங்கால் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்’ என்ற திருநெறியை அவர்களுக்கு எடுத்துக்காட்டி, இவ்வுலகில் எளியவரைக் கண்டு இரக்கங்கொண்டு அவர்களைக் காக்கின்றவர்களே மனித குலத்தவர்கள் என்றும், இரக்கம் காட்டாது எளியவர்களை மேலும் நசுக்கி, அவர்கள் உழைப்பை உறிஞ்சி, அவர்கள் வறுமையை அதிகமாக்கி அல்லல் தரும் கூட்டம் இரக்கம் அற்ற கூட்டம்—அதாவது மிருக இனம் என்றும், அது மக்கள் இனம் ஆகாது எனவும் கூறி இயற்கைப் படைப்பில் சாதி, சமய வேறுபாடுகளைக் காண்பது அறிவுடைமை ஆகாது எனவும் கூறி விளக்கம் சொல்லுவான்.

பாண்டியன் தனது கிராமத்தில் எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்று, வாழ்க்கையில் ஒரு பெரிய குறிக்கோளையும் கண்டான். தனது அக்காள் சென்னையில் ஒரு பெரிய வழக்கறிஞரை மணந்து சிறப்புடன் வாழ்வதால், அங்கு தனது இளைய தங்கை கனகத்தைக் கல்லூரியில் படிக்கவைக்கவேண்டும் என்று ஆவல் கொண்டான். அதற்காகத் தனது அக்காளைக் கண்டு பேசி, கனகத்தைச் சென்னையில் படிக்க வைக்க ஏற்பாடுசெய்து, அதற்கென மாதம் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய் அனுப்பிவைத்தான்.

பாண்டியனின் செல்லத் தங்கை இளமையிலேயே தனது தாயை இழந்தவள். பின்னர் தந்தையின் அரவணைப்பில் உள்ளூர் உயர்நிலைப் பள்ளியிலேயே படித்தவள். கனகம் தன் அக்காள் நீலாம்பிகை வீட்டில் மிகச் செல்லமாகத்தான் வளர்ந்துவரலானாள். கனகம் சென்னை டாக்டர் தருமாம்பாள் கல்லூரியில் பி. எஸ். ஸி. படித்து

வந்தாள். அதில் தாவரவியல், விலங்கியல் முக்கியமான பாடம். பி. எஸ். ஸி. வகுப்பில் பெண்கள் தாவரவியல் விலங்கியல் பாடங்களை முக்கிய பாடங்களாக எடுப்பது கடினம். ஆனால் கனகம் இதற்கு ஒரு தனிவிலக்கு. கனகத்தின் ஆராய்ச்சி பிற மாணவர்களுக்கும் நாட்டுக்கும் தேவைப்படும் அளவில் நுணுக்கம் காணப்பட்டது. கல்லூரிப் பேராசிரியர் கனகத்தின் அறிவுத் திறமையிலும் திறனாய்வுப்போக்கிலும் அளவு கடந்த பாராட்டுதலைத் தெரிவித்தார். கல்லூரித் தலைவரிடம், கனகத்தின் நுண் அறிவின் திறமையைப்பற்றி வியக்கக் கூறி, அவளது அறிவாற்றலைத் தமிழகம் நன்கு பயன்படுத்திக்கொள்ளவும், அவளால் தமிழ் நாட்டுக்கே பெருமையையும் புகழையும், மேற்கில் மெத்த வளரும் அறிவுக்கலைகளைத் தமிழர் பெறக் கனகம் போன்ற அறிவு மேதைகள் மேலைநாடுகளுக்குச் சென்று அங்குள்ள விஞ்ஞானப் பேருண்மைகளைத் தெரிந்து வர, கனகத்தை அமெரிக்க நாட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலும் உங்களுக்குப் பின் இக்கல்லூரியின் தலைவியாக இவளைப் பெறின் தமிழகத்துக்கே ஒரு தனிச் சிறப்பு அளிக்கும்' எனக் கூறினார்.

தருமாம்பாள்கல்லூரித் தலைவி வெற்றிச் செல்வியும் கனகத்தை நன்கு அறிவாள். ஒவ்வொரு கால் ஆண்டுத்தேர்வு மதிப்பெண்பட்டியலில் கையொப்பம் இடும்போதெல்லாம் கனகத்தின் தேர்வு மதிப்பெண்கள் வெற்றிச்செல்வியைச் சிறிது திகைக்கவைக்கவேசெய்யும். ஏனைய மாணவிகளின் எண்ணிக்கைகளுக்கும் இவளது எண்ணிக்கைக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கும். ஆகவே கல்லூரித் தலைவி, அடிக்கடி கனகத்தைப் பற்றி கனகத்தின் வகுப்பாசிரியரைக் கேட்பதுண்டு. ஆதலால் பேராசிரியர் கனகத்தைப் பற்றிச் சொன்னவுடன், தனக்கும் அவ்வித எண்ணம் உண்டு எனவும், தமிழ்ப் பெண்களின் அறிவுத் திறமையைப் பாராட்டி ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னும், பொற்றாமரைப் பூக்களும் பரிசில்களாகத் தருவதற்கு அரசர்கள் இல்லையாயினும், எனது கல்லூரி மாணவி ஒருத்தி 'நோபல் பரிசு' பெறவேண்டும் என்ற கருத்து எனது மனத்துள் நீண்ட நாட்களாக உண்டு. ஆகவே தங்கள் கருத்துப்படி கனகத்தின் எம். எஸ். ஸி. தேர்வு முடிந்தவுடன் அவளை அவசியம் மேல்நாட்டுக்கு அனுப்ப முயற்சி எடுத்துக்கொள்ளப்போகிறேன்'' என்று பேராசிரியருக்கு விடைகூறி அமைந்தார் கல்லூரித் தலைவி.

இந்த முயற்சிகள் இப்படி இருக்க, பாண்டியன் தனது தந்தை காத்து வந்த கரும்பு ஆலையைத் தினம் மாலைதோறும் பார்வையிடுவான். காலையில் கழனிப்பக்கம் போய்வருவான். இப்படி இவன் தனது கிராம வாழ்க்கையை மிகச் சீரிய முறையில் நடத்தி வந்தான். ஒரு நாள் மாலை தனது களத்துநெற்பயிரைப் போரடிக்கும் மேட்டில், அதைப் பார்வையிடும் வண்ணம் அங்கு சென்று ஒரு வைக்கோல் போரில் சாய்ந்த வண்ணம் வானத்தில் மேகங்கள் தரும் இயற்கை ஓவியங்களைக் கண்டு களித்தவண்ணம் இருந்தான். அந்த மேகத்தில் சென்னைக் கடற்கரையை ஒத்த மணற் பரப்பும் — அங்கே மணல் அலைகளும் இருக்கக் கண்டான். இப்படி இயற்கை இன்பத்தில் இலயித்துவிட்ட இவனது மனம் போரடிக்கும் மாடுகளைச் சில பெண்கள் பாடல்கள் பாடி உற்சாகம் ஊட்டும் இனிய ஒலி ஒன்றில் ஈடுபட்டது.

'புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை'

இந்தப் பாரதியாரின் பாடல் இனிய ஓசையுடன்வந்த திக்கையே நோக்கினான். ஒரு கணம் மயங்கினான். தன்னை மறந்தான். தலைப்பட்டான் இசை வந்த திக்கில்—அவ்விசை பிறந்திடும் செவ்விதழ் பதிந்த முகத்தை நோக்கினான். தினம் பார்த்த முகத்தைத்தான் அன்றும் பார்த்தான். ஆனால் வானவெளி இயற்கைக் காட்சியையும்மறந்து பாரதியின் காவியத்தை போரடிக்கும் குப்பைமேட்டில் — சேற்றில் செந்தாமரை பிறந்தது போல் பாடிக்கொண்டிருக்கும் ஒரு ஏழைப் பெண்ணைப் பார்த்ததும், பாண்டியன் மயங்கினான். அந்தச் சமயத்தில் பாண்டியன் மட்டும் அல்ல, பாராளும் மன்னனும்கூட மயங்கி இருப்பான்.

வறுமையிலும் வாட்டத்திலும் பிறந்த அந்தப் பெண் மேகலை ஒரு தனி அழகுடையவளாகத்தான் திகழ்ந்தாள். வயது பதினெட்டுத்தான். வறுமையிலே செம்மை காணும் முகப்பொலிவும், 'அருள் உள்ளமும்' அவளது புன்னகை முறுவலிலே காணப்பட்டது. அவளது அழகைப்பற்றி விரித்துரைக்க அவனுக்குச் சொற்கள் அகப்படவில்லை. ஆனால் வள்ளுவர் அந்தச் சமயத்தில் தக்க உதவியாய் இருந்து இப்படி விரித்துரைக்கலாம் எனக் கூறுவதுபோல் மனத்திடை நினைக்கிறான்:

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.'

இவ்வுருவம், 'அழகு வடிவங் கொல்லோ என்றும், மைக்கோலமும் வளரிளஞ்சாயலும் வனப்பும் உடையதோர் அழகிய மயிலாங்கொல்லோ என்றும், தக்க செல்வக்குலத்துள் பிறந்த மக்களுள் ஒருத்திகொல்லோ' என்றும் அப்பாடலுக்குக் காளிங்கர் கூறிய உரை நினைவுக்கு வர, தான் மயங்கியதில் வியப்பு ஒன்றுமில்லை என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டான்.

பாண்டியன் மயங்கி அவளைப் பார்த்தபோது அவளும் இவனைப் பார்த்தாள். இருவர் கண்களும் பேசின. அவள் போரடிக்க மாடுகளைச் சுற்றிச்சுற்றி ஓட்டும்போது ஒவ்வொரு தடவையும் அவளது கண்கள் இவனோடு பேசின.

ஒரு முறை அவள் சுற்றி வரும்போது அவள் பாண்டியனை நோக்கிப் பார்த்தனளாம். பாண்டியனும் அவளை நோக்கிப் பார்த்தனனும். அவள் பதிலுக்கு மீண்டும் இவனை எதிர்நோக்காமல் முகம் நாணி நின்றாளாம், அப்படி நாணி நின்றபோது அவள் கண்களில் அன்புநீர்—பாசநீர் ஊற்றெடுத்துக் கண்களில் நிறைந்து இருக்க கண்டானும். இல்லை இல்லை, அந்நீர் கண்களிலிருந்து இரண்டு சொட்டுகள் கீழே விழுந்ததாம். அந்நீர் இவனைக் காதலிப்பதாக உறுதி கூறுவதாகவும், கண்கள் வார்த்த நீர் அக்காதல் பயிரினை வளர்ப்பதற்கே என நினைந்தும் மயங்கினனும். இந்த மயக்கத்தையும் பாண்டியன் வள்ளுவரிடத்திலிருந்தே பெற்றான்.

'நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டியநீர்'

பாண்டியன் கண்களால் மேகலையிடம் விடைபெற்றுக் களத்து

மேட்டை விட்டு நேரே வீட்டிற்குப் போய்விட்டான்.

இந்த முதல் சந்திப்புக்குப் பிறகு பாண்டியனும் மேகலையும் பல முறை இலைமறை காய்போல் சந்தித்து இருக்கின்றனர். இந்தச் சந்திப்பு ஊரிலும் பரவிவிட்டது. மேகலை அதே ஊரில் இரண்டு காணி நிலத்திற்கு உரிமையாளராய் இருந்த வேலப்பக் கிராமணியின் மகள். வேலப்பக் கிராமணி மகன் காளத்தி தன் தந்தை இறந்த பிறகு தான்தோன்றியாய் வாழ்ந்து, இருந்த இரண்டு காணி நிலத்தையும் போக்கிக்கொண்டான். வறுமையால் பலநாள்வாடிக் கடைசியாகச் சென்னைக்கு ரிக்ஷா இழுத்துப் பிழைக்கலாம் என்று சென்றுவிட்டான். ஆனால் வேலப்பக் கிராமணியின் மகள் பண்போடு கூலி வேலைசெய்து வாழ்ந்து வந்தாள். தன் தந்தைக்கு உரிய சிறு குடிசையையும் அதைச் சுற்றியுள்ள சிறு மனையையும் கட்டிக் காத்துவந்தாள். எங்கோ தொலைவு உறவான தன் அத்தை முறை அம்மணி அம்மாளின் துணையுடன் வாழ்ந்து வந்தாள்.

மேகலையின் வாழ்வில் பூரித்துப் பூக்க இருக்கும் இன்பப் புது வாழ்வைப்பற்றி ஒருபுறம் இன்பமும், மறுபுறம் தான் ஒரு குப்பை மேட்டுப் பூதானே, அதனை முகர்ந்து கசக்கி வீசி எறிந்து விடுமோ இவ்வுலகம் என்பன போன்ற கருத்துக்களை நினைந்து ஏங்குவாள். ஆயினும் பண்புள்ள பாண்டியன் நெறியால் உயர்ந்தவன். அவன் ஒரு நாள் அமைதி நாடி மேகலையுடன் போரூருக்குச் சென்றபோது, அங்கு முருகன் மலை மீது ஏறிச் சுற்றியுள்ள இயற்கையின் அற்புதக் காட்சியினைக் கண்டுவிட்டு, கோயிலின் அருகில் இருக்கும் சுனை நீரில் சிறிது விளையாடிய பின்னர், பாண்டியன் மேகலையை நோக்கி, 'நான் யாரோ, நீ யாரோ, உன் தந்தையர் யாரோ, அங்ஙனமே உனக்கும் எந்தயர் யாரோ, உனது பண்பும் எனது பண்பும் இரண்டறக் கலந்துவிட்டது. யான் ஊர் அறிய விரைவில் உன்னைத் திருமணம் செய்துகொள்கிறேன்—வருந்தற்க! எனக் கூறி மீண்டும் தம் ஊர் வந்தனர். இவர்களுடைய நட்பு ஊரெல்லாம் புகைந்து கொண்டிருந்தது.

மாலை 4-30 மணி. 'தமிழ்க் கடல்' அரண்மனையில் மங்கல ஒலி மிக இனிமையாக எழும்பி அரண்மனைக்குள் வருபவரையெல்லாம் 'வருக! வருக!! என அழைத்துக் கொண்டிருந்தது. 'தமிழ்க் கடல்' அரண்மனை சென்னை சாந்தோம் கடற்கரையில் மிகக் கம்பீரமாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது. அவ்வரண்மனை பேராசிரியர் கா. நமச்சிவாயருக்குச் சொந்தம். வழி நெடுக விதவிதமான பூத் தொட்டிகள். பல நிற இலைகளையுடைய குரோட்டன்ஸ் செடிகள். வாயிலில் நுழையும் போதே கண்களுக்கு இனிமைதரும் வண்ணப் பூ தோரணங்கள். சற்று உள்ளே நுழைந்ததும் மல்லிகைப் பூ தோரணங்களும், அந்தத் தோரணங்களின் இடை இடையே தாமரை மலர்களைத் தொங்கவிட்டிருப்பதும், அம்மண மலர்களில் இருந்து வரும் நறுமணம் இதயத்திற்கு இனிமை பயப்பதாய் இருந்தது. உள்ளே சென்ற மக்கள் அனைவரும் ஒரு பெரும் கூடத்தில் அமர்ந்தனர். கூடத்தில் மலர்த் தோரணங்களின் இடையில் பல வண்ண மின்விளக்குகள் கண்களுக்கு விருந்தளித்தன. அப்பெருங் கூடத்தின் ஓர் இடத்தில் ஒரு சிறிய மேடை இருந்தது. அம் மேடையில் மூன்று நாற்காலிகள் இருந்தன. பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் சுமார் ஆயிரத்துக்குமேல் கூடி இருந்தனர். வந்திருந்தோர் எல்லோரும் திருமணப் பந்தல் இல்லையே என ஏங்கினர். வியப்பின் மிகுதியால் கூடத்தில் எங்கும் சந்தடி இல்லாமல் எல்லோரும் மேடையையே நோக்கினர். அவண் இருந்த மக்களின் கண்கள் வேறு பக்கம் நோக்க மறுத்தன. கண்களை இமைத்து இமைத்து மேடையையே பார்த்தவண்ணம் இருந்தனர் பலர்.

இரண்டு அழகிய இளைய பெண்கள்—சிறுவையூர்ச் சகோதரிகள் பல பாடல்களை வெவ்வேறு பண்களில் பாடி மக்களை மகிழ்வித்தனர். மணி சரியாக மாலை 5-30 ஆயிற்று மணமக்கள் புத்தாடை புனைந்து மேடையில் இரண்டு நாற்காலிகளில் வந்து உட்கார்ந்தனர். மண விழாத் தலைவர் மணவழகர் எஞ்சி இருந்த் நாற்காலியில் வந்து அமர்ந்தார்.

மணமக்கள் யாரும் இல்லை, ஜமீன் கந்தசாமி மகன் பாண்டியனும், பாண்டியன் பண்ணையில் போரடித்தும் — நடவு நட்டும் தொழில் செய்துவந்த எழிலரசி மேகலையும்தான். கரும்பாலை முதலாளி—ஜமீன்தார் கந்தசாமி மகன் திருமணம் என்றால், சொல்லவா வேண்டும் கூட்டத்தை. திருமண விழா மிகப் பொலிவுடன் காணப்பட்டது.

ஆனால் மணமண்டபத்தில் இருந்த பலர் இத் திருமணத்தில் நான்கு கால்களால் இட்ட பந்தல், ஓமகுண்டம், கொட்டைப் பாக்கு ஒன்பது, கலசம், தேங்காய், கலை விளக்கு, குட விளக்கு, அம்மி முதலியன இல்லையே எனக் குசு குசு என ஆங்காங்கே ஆரவாரங்களைக் கிளப்பினர்.

சிலர் என்னதான் ஜமீன்தார் மகனாய் இருந்தாலும்– 'குலம் குப்பையிலே பணம் பந்தியிலே' என்றபடி எல்லா உறவினர்களும் வந்துவிட்டார்களே, நமது பாண்டியன் பையூர்கோட்ட வேளாளன் அல்லவா? இருபத்து நான்கு கோட்டங்களுள் பையூர் கோட்டம் ஆறுவதுகோட்டம். அந்த மேகலை கிராமணி வகுப்பு மகளாயிற்றே. அதுவும் அவள் வக்கற்றவள். பாண்டியன் களத்திலேயே வேலை பார்த்தவள். மேகலையின் அண்ணன் காளத்திதான் பாண்டியன் அக்காள் நீலாம்பிகையின்குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்ல ரிக்ஷா இழுக்கும் வாடிக்கைகாரன்-என்று இவ்வாறு பலர் பலவாறு பேசிக் கொண்டார்கள்.

இந்தச் சலசலப்புக்களுக்கிடையே திருமண மேடைமேல் இருந்த திரு. மணவழகர் எழுந்து நின்று, 'சகோதரர்களே! தோழர்களே! தாய்மார்களே!' என்றார். கூட்டம் கூச்சல் இன்றி மிக அமைதியாக இருந்தது. அவர், "இன்று யான் நிகழ்த்தப்போவது தான் நல்ல திருமணம். சீரிய திருமணம், உயர்ந்த திருமணம், பழந்தமிழர் செய்துகொண்ட திருமணம்'' என்று கூறி, மேலும் 'ஈண்டு மணமகன் இந்த மணமகளைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்கிறேன் என்றுசொல்லி தன் மலர்மாலையை மணமகளுக்கு இடுவார். அப்படியே மணமகளும் இந்த மணமகனைத் தனது வாழ்க்கைத் துணைவனாக ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லித் தனது மலர்மாலையை இடுவாள். நீங்களும் நானும் மலர்கள் தூவி, தமிழ்மொழிபோல் நெடிது வாழ்க' என வாழ்த்துவோம். அவ்வளவுதான், திரு

மணம் முடிந்துவிடும். பின்னர் மணமக்கள் உங்களுக்கு விருந்து அளிப்பர்' என்று கூறியதும் ஒரே கைதட்டல், எங்கும் வாழ்த்தொலி.

அதற்குப்பின் மிக உருக்கமாகவும் உணர்ச்சி ததும்பவும் ஒரு சிறு சொற்பொழிவே செய்து, தான் முதலில் கூறியவாறு மணவினை முடித்துவைத்தார்.

பிறகு திருமண விழாவில் கூடி இருந்த மக்கள் அனைவரும் மணமக்களை மலர் இட்டு, 'வாழ்க! வாழ்க!' என வாழ்த்தினர். அதன் பின்னர் பாண்டியன் அளித்த பெருவிருந்தினைப் பலரும் உண்டு களித்து அமைந்தனர்.

உறவினர்களும், நண்பர்களும் பாண்டியனுடைய கலப்புத் திருமணத்தை ஒப்புதல் செய்து வரவேற்றதோடு அமையாது, பாண்டியன் ஓர் ஏழைப் பெண்ணின் பண்புக்கு ஏற்றம் அளித்து, அவளது இருண்டுவிட்ட வறண்ட வாழ்க்கையை வளமாக்கியதற்குப் போற்றிப் புகழ்ந்தனர். மேலும் இன்னொரு சிறப்பு, திருமண வீட்டு வாயிலை அகலத் திறந்துவைத்து இன்னார் இனியர் என்று பாராது அனைவருக்கும் ஒரே பந்தியில் விருந்தளிக்கச் செய்தான். இந்த இலட்சிய உணர்வை அனைவரும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

சென்னைத் "தமிழ்க்கடல்'' மாளிகையில் மணம் செய்துகொண்டு அன்றிரவே காட்டூருக்குப் போய்விட்டான் பாண்டியன். காட்டூருக்குச் சென்ற சில நாட்களுக்கெல்லாம் தனது தந்தை தனது திருமணத்திற்கென்று தனியாக ஒதுக்கிவைத்த ரூபாயில், தனது தங்கை படித்துவரும் தருமாம்பாள் கல்லூரி விஞ்ஞான வகுப்பு ஆராய்ச்சி நிதிக்காக தனது திருமணச் செலவு போக எஞ்சியதை அளித்துவிட்டான். இச்செய்கையையும் உறவினர்கள் எதிர்த்தனர்.

சென்னைமாநகர் மக்கள் எல்லோரும் பாண்டியனின் நன்கொடையைப் போற்றினர். அதுவும் அவன் டாக்டர் தருமாம்பாள் கல்லூரிக்குக் கொடுத்தது சாலவும் பொருத்தம் என்பது அறிஞர்களின் கருத்து. அரசியல் தலைவர்கள் அவனை வாழ்த்தினர். "பெண்களின் பெருமைக்கும், தாசிகள் கூட்டம் நாட்டைவிட்டு ஒழிய வேண்டும் என்றும், கோயில்களில் தாசிகளுக்குப் பொட்டுகட்டும் வழக்கம் ஒழியவேண்டும், கைம் பெண்கள் நிலை மாறவேண்டும், கணவனால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பெண்களின் நிலை உயர வேண்டும், ஏழை மாணவமாணவிகளுக்கு எப்பொழுதும் புத்தகமும், பிறர்மூலம் உதவிச் சம்பளமும் அளித்தும், பிற மொழியாகிய இந்தி தமிழகத்தில் கால் ஊன்றக்கூடாது எனச் சிறைக்கூடம் புகுந்தவரும், வாழ்நாளெல்லாம மக்கள் குல நன்மைக்கே போராடிப் போராடி வீரத்தமிழ் மூதாட்டியாய் விளங்கிய டாக்டர் தருமாம்பாள் கல்லூரிக்கும் பாண்டியன் இவ்வளவுப் பெருந்தொகையைக் கொடுத்தது வரலாற்றிலேயே போற்றுதற்குரிய முதல் செயலாகும் என எல்லா தினத்தாள்களும் தலையங்கங்கள் தீட்டின. இவ்வளவு பெருமைக்கும்உகந்தவனாய்ப்பாண்டியன் மீஞ்சூரில் வாழ்ந்து வருகிறான்.

பாண்டியன் கண்காணித்து வரும் சர்க்கரைத் தொழிற்சாலையில் உள்ள எல்லாப் பணியாளருக்கும் நிகர வருமானம் போக மற்றவைகளை பங்கிட்டுக்கொடுத்து விடுவான். இங்ஙனம் செம்மைசால் உள்ளம் உடையவனாயும் திகழ்ந்து வந்தான்.

இந்தப் பாண்டியன் இளமை முதல்—சிற்றில் சிதைத்து விளையாடும் பருவம் முதல் ஒருவனோடு நெருங்கிப் பழகிவந்தான். அவன் தான் கமலக்கண்ணன். பாண்டியன் படிப்பு கல்லூரி முதல் வகுப்போடு நின்றுவிட்டது. ஆனால் நண்பன் கமலக்கண்ணன் சென்னையில் எம். ஏ. வகுப்பில் படித்து வந்தான். பாண்டியனுக்குக் கமலக்கண்ணனை தன் தங்கை கனகத்திற்கு மணம்செய்து வைத்துவிட வேண்டும் என்பது அவன் எண்ணம். கமலக்கண்ணன் அரசூர் முனுசாமி உடையாரின் ஒரேமகன். ஆனால் ஏழை. சிறுவயது முதல் கமலக்கண்ணன் அரசியலார் உதவிச் சம்பளத்திலேயே படித்து முன்னுக்கு வந்தான். இப்பொழுதெல்லாம் கமலக்கண்ணனின் கல்விச் செலவு முழுவதையும் பாண்டியனே கவனித்துவந்தான். பாண்டியன் மனமும் கமலக்கண்ணன் மனமும் ஒருமனதாய் ஒன்றி எத்தனையோ ஆண்டுக்காலம் ஆயிற்று. தன் ஆருயிர் நண்பன் கமலக்கண்ணனுக்காகத்தான் எந்தவித தியாகத்தையும் செய்ய முனைந்திருந்தான் பாண்டியன். அவ்விதமே கமலக்கண்ணனும் பாண்டியனைத் தன் உயிர்த் தோழனாக மட்டும் கருதவில்லை; தன் தந்தையின் நிலையிலும் வைத்து உள்ளத்தால் போற்றிப் பெருமைகொண்டான். (தொடரும்)

6-ம் பக்கத் தொடர்ச்சி

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் உடையவர்கள். ஆகவேதான் அவர்கள் என்றும் பிறர்க்கு அடிமையாக வாழ்ந்ததில்லை. இதைச் சரித்திரம் படித்த பண்டித நேரு உணராதவர் அல்ல! இருப்பினும் ஹரசரும், அக்பரும் காணாத "ஏக இந்தியா'' என்ற ஒட்டு இந்தியாவை நேரு அவர்கள் பிணைத்துக்கட்டி, ஆள ஆசைப் படுகிறார்!

இந்தி வேண்டாம்—இந்தியைத் திணிக்காதே, அதனால் பேராபத்து உண்டாகும் என்று தென்னகம் ஏகமனதாக, எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்துதான் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தும் திணிக்கப்படுகிறது இந்தி!

தென்னகம் மாத்திரம் இதை எதிர்க்கிறது என்று நினைக்க வேண்டாம். விடுதலைச் சிங்கங்களைத் தந்த வங்கம் கூட இதை எதிர்க்கிறது! இருப்பினும் இவைகளுக்கெல்லாம் அவர்கள் செவி சாயாமல், ஆதிக்கவெறி செலுத்துகிறார்கள்.

இதுவரை, நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் ஓரவஞ்சனை காட்டி, நம்மை ஓட்டாண்டியாக்குவதல்லாமல், அடிமைகளாகவும் மாற்றப் பார்க்கிறார்கள் இந்த வடநாட்டுக்காரர்கள்.

இது நம் நாட்டிற்கு அளித்திடும் அநீதி என்று தெரிந்துதான், நாம் நம்நாடு தனிநாடாகப் பிரியவேண்டும் என்று சொல்கிறோம். **"திராவிட நாடு திராவிடருக்கே"** என்ற உரிமைக் குரல் எழுப்புகிறோம்.

இதுவரை நம் குரல், வெறும் கூச்சல் என்று நினைத்த மந்திரிகள்கூட, இன்று வடநாட்டின்' ஓரவஞ்சனையையும், ஆதிக்க வெறியையும் உணர ஆரம்பித்துவிட்டார்கள். எனவேதான் எழிலி! நான் சொல்கிறேன்,

சட்டத்தை சாணம்போன்று மதிக்கும் இவர்கள் ஆட்சி, வெகு நாட்களுக்கு நீடிக்காது! நாட்டின் பிரிவினை அண்மையிலேயேதான் இருக்கிறது என்று உறுதியுடன் கூறுகிறேன். உன் அன்புள்ள,

இன்பன்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆராயும்போது அவரவர்களின் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் தக்க வருவாயும் அதற்குத் துணையுமாகவே தொழில்கள் அமைந்துள்ளன என்பதும், அத்தொழில்களை யாரும் மேற்கொள்ளலாம் என்பதும் அத்தொழிலை மேற்கொண்டவர்கள் அத்தொழில் இனத்தவராகக் கருதப்படுவர் என்பதும், அவர்கள் பெற்ற பிள்ளைகளாயிருந்தாலும் மாற்றுத்தொழிலை மேற்கொண்டால் வேற்றினத்தராகவே கருதப்படுவர் என்பதும் தொல்காப்பியம் காட்டும் உண்மை.

இனிப்போக்குவரவு சாதனங்கள் இல்லாத தன்மையால் அக்காலத்து வேளாளர்களே சேர நாட்டில் நாயர் ஆகவும் மேனன் ஆகவும் ஆயினர். கொங்கு நாட்டில் கவுண்டர்களாயினர். சோழ நாட்டில் வெள்ளாளப் பிள்ளைகளாயினர். பாண்டிய நாட்டில் கார்காத்த வேளாளர் ஆயினர். தொண்டை நாட்டில் முதலியார்களாயினர் தெலுங்கு நாட்டில் கம்மவாருநாயுடு ஆயினர். அங்ஙனமே அரசர் முதலிய ஏனைப் பிரிவுகளிலும் நாடுபற்றிய பாகுபாடுகள் அமைந்தன.

இப்படி மொழியும் நிலமுங் காரணமாக அங்கங்கே தங்கி வளர்ந்த சமுதாயம் போக்குவரவு இல்லாமையால் அங்கங்கே நிலைத்து எல்லோரும் ஒர்குலம் என்ற உணர்ச்சி குன்றி உதிரிகளாயினர்.

இந்தப் பழைய முறைகளை எல்லாம் விழிப்பும் புத்தறிவும் பெற்றுள்ள இன்றைய மக்கள் சமுதாயம்அவற்றில் புதுமுறைகாணவும், அதன் வாயிலாக இன எழுச்சி பெறவும் முயல்வது உண்மையிலேயே ஒரு பெருஞ்செயல், அரிய சாதனை என்றே சொல்லவேண்டும். தொழில் காரணமாக அமைந்த சாதிப் பாகுபாடுகளை நீக்கி, யாரும் எந்தத் தொழிலையும் செய்யலாம், தொழில், 'சாதியை வளர்க்கும் சதிக்கூடமாக ஆகக்கூடாதென்பதன் அடிப்படையிலேயே இன்றைய சமுதாயம்—திராவிட இனம் பணியாற்றி வருகிறது.

★

திராவிடத்தைப் பற்றி!

[வில்லவன்கோதை]

திராவிடத்தைப் பற்றியும், திராவிடர்களின் இணையில்லா நாகரிகத்தைப் பற்றியும் நில, மொழியியல் வல்லுநர்களின் கருத்துகள் சில இங்கு தொகுக்கப்பட்டிருக்கின்றன.

"ஆரியர் வருகைக்கு முன் வட இந்தியா முழுமையிலும் திராவிட மொழி வழங்கிற்று என்பதில் சிறிதும் ஐயப்பாடு வேண்டியதில்லை!"

Lectures on the ancient history of India. By Mr. M. D Bhandarkar, M. A.

'இந்தியப் பழஞ் சரித்திர விரிவுரைகள் எழுதியவர்: திரு. பந்தார்க்கர் எம். ஏ.

"திராவிடர் அயல் நாடுகளோடு வாணிகஞ் செய்தார்கள்; அவர்கள் தேக்கு, மயில், வாசனைப் பொருள்கள், முத்து, ஆடை முதலியவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினார்கள். இவ்வகைத் தொழில்களோடு சம்பந்தப்பட்ட சொற்கள் திராவிடமாயிருத்தல் வேண்டும்; இரவல் பெற்றனவாய் இருத்தல் இயலாது. இவ்வாராய்ச்சி இன்னும் நன்கு செய்யப்படவில்லை. ஆராய்ச்சியில் வடமொழி என்று கொள்ளப்படும் பல சொற்கள் திராவிடமாக மாறலாம்."

Life in ancient India, Page 15. By P. T. S. Iyengar. M. A.

பி. டி. எஸ். ஐயங்கார் எம். ஏ.

"ஆரிய நாகரிகம் பெரிதும் திராவிட நாகரிகத் தொடர்பு பெற்றதென்பதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை" — 'ராப்சன்'

'Professor Rapson's ancient India' Page 29

"கிறித்து பிறப்புக்கு முன்னும், ஆரியர் வருகைக்கு முன்னும் திராவிட நாகரிகம் பொருளாதார, இலக்கிய, திருமண முறைகளில் நல்லதொரு வளர்ச்சியை எய்தியிருந்தது என்பதில் ஏதும் ஐயப்பாடு இல்லை"

—பேராசிரியர் ஆனந்த குமாரசாமி அவர்கள்.

'History of India and Indonacian art' page6. By Dr. A. K. Annanda-kumarasamy.

"வேதமொழியின் சொல் வைப்பு முதலிய பிறவும் திராவிட மொழிச் சார்புடைந்தன"

பி. டி. எஸ். ஐயங்கார்.

'Life in ancient India' By P. T. S. Iyengar, M. A.

"திராவிட நாகரிகத்தை நாம் ஒருபோதும் தரக்குறைவாய் எண்ணுதல் தக்கதன்று; திராவிட நாகரிகத்தின் அடிப்படையினால் தான் ஆரிய நாகரிகம் செழிப்பும் ஆழமும் எய்திற்று. திராவிடர்கள் பற்பல கலைகளிலும் திறமையடைந்திருந்தார்கள்"

நோபெல்பரிசு பெற்ற வங்கக் கவிஞர் தாகூர்.

Dravidian India Page 117 By Robendhra nath Tagore.

"திராவிட இடப் பெயர்கள் மெசபொடோமியா, ஈரான் முதலிய தேசங்களில் காணப்படுகின்றன. மிட்டானி Mittani (Kharian) என்னுமிடத்தில் பேசப்பட்ட மொழி இக்காலத் திராவிட மொழியுடன் மிகவும் ஒத்திருக்கிறது."

இராதா குமுத் முக்கர்ஜி அவர்கள்.

'Hindu Civilization' page 38. By Radha Kumud Mookerji.

'புத்தர் திராவிட மரபைச் சேர்ந்தவர்!' புத்தர் கபிலர் வழியிற்றோன்றிய நாக குலத்தவரென்று 'ஓல்ட்காம்' என்னும்ஆசிரியர் ஆராய்ந்து கூறுகிறார் ('சூரியனும் சர்ப்பமும்' என்னும் நூலில் பக்கம் 66)

ந. சி. கந்தையாபிள்ளை.

தமிழ் இந்திர-பக்கம் 40.

*

சாலடியரின் கி. மு. ஆறுயிரத்திற்கும் கி. மு. ஐந்தாயிரத்திற்கும் இடைப்பட்ட களிமண் தகடுகளில் திராவட (Drauvada) திராபட (Drapada) என்னும் பெயர்கள் பெரிதும் காணப்படுகின்றன. சாலடியர் தமிழர்களே.

—ஆர்லான்.

'Links with past ages' page 222. By E. F. Orlon.

வங்கத்தில் ஒரு வாரம்!

கா. வேழவேந்தன்

இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்ற இரவிந்திரநாத் தாகூர் பிறந்த இசைபெற்ற மாநிலம்; வெள்ளையனை விரட்ட வீறு கொண்டெழுந்த வீரர் சுபாஷ் போசைத் தந்த மண்டலம்; தமிழகத்தையடுத்து இன்றைக்குத் தனக்கென்று பல்வேறு இலக்கியங்களை ஆக்கிக்கொண்ட வளமார் பூமி; இத்தனை சிறப்புக்களும் கொண்டது வங்கம் என்றுகேள்வியுற்றபோது, அதைக் காணவேண்டும் என்ற தணியாத ஆவல் என் நெஞ்சில் நெடுநாள் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அண்மையில்தான் அவ்வெண்ணம் ஈடேறியது; அருமைமிகு கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத் தோழர்களின் அழைப்பினால் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன், திரு. அன்புப்பழம்நீ ஆகியோருடன் வங்கம் செல்லும் வாய்ப்புக்கிடைத்தது.

புகைவண்டி சென்னையை விட்டுப் புறப்பட்டது; நெஞ்சம் வண்டியின் வேகத்தைமுந்தியது! ஆந்திர மாநிலம் வந்தது. ஆந்திரர்களின் உழைக்கும் கைகள் பட்டவிடமெல்லாம் மண்மாதா தன் மேனி முழுவதும் நெல்மணிகளாகக் காட்சி தருவதைப் பார்த்துக்கொண்டே பயணம் தொடங்கினோம். அடுத்து ஒரிசா மாநிலம் வந்தது; நிலமெல்லாம் கரடு முரடாகக் கிடந்தது; அதே முறையில் அம் மாநில மக்களின் உடையமைப்பும் காணப்பட்டது.

இரண்டு நாள் ஓட்டத்திற்குப் பிறகு வங்கத்தின் புகழ்பெற்ற ஹௌரா புகைவண்டி நிலையத்தை வண்டி அடைந்தது. சென்னையில் காணமுடியாத அளவு நெருக்கடியும், விரைவும் நிறைந்த இப்புகை வண்டி நிலையத்தின் அமைப்பு முறையே எங்களைத் திகைக்க வைத்தது. வெளியில் வந்தோம்.

எங்கு நோக்கினும் பரபரப்பு நிறைந்த வண்டிகள் சாலைகளைக் கடப்பதற்கும் இடமளிக்காமல் பறந்துக் கொண்டிருந்தன; டிராம் வண்டிகள் தமக்கே உரிய ஒலியுடன் ஒருபுறம் ஓடிக்கொண்டிருந்தன; இருவண்ணமிட்ட வாடகைக் கார்கள் மக்களுக்கு மிகவும் பயன் தரும் முறையில் போக்கு வரத்துக்குத் துணை செய்தன.

இத்தனையையும் பார்த்துக் கொண்டே 'ஹௌரா' பாலத்தை அடைந்தோம்; அந்தக் காலத்தில் ஆண்ட ஆங்கிலேயன் ஆட்சியில் அமைக்கப்பெற்ற பாலம் அது! ஹூக்ளி நதியின் குறுக்கே அமைக்கப்பெற்றிருக்கும் அதன் நெடிய அமைப்பு, அறிவியல் வித்தகர்களின் மூளைத் திறனுக்குச் சிகரம் வைப்பதுபோன்று காணப்படுகின்றது; அப்பாலத்தைத் தாங்குவதற்குத் தூண்கள் ஒன்றுகூட ஆற்றில் இல்லை! பாலத்தின் முழுப் பாரத்தையும் மேலே இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கும் வன்மை வாய்ந்த சங்கிலிகள் நமக்குப் புரியாத புதிராக வுள்ளன. இந்தியாவிலேயே மிகமிக நெருக்கடி நிறைந்த பாலம் இதுதான் என்று நண்பர்கள் சொன்னார்கள்.

பிறகு டல்ஹௌசி சதுக்கத்தை அடைந்தோம்; பகல் நேரத்தில் நகரின் பாதியளவு மக்கட்தொகை இப்பகுதியில் கூடுகிறது; சென்னையில் மவுண்ட் ரோட்டில் உள்ள இன்ஷ்யூரன்ஸ் கட்டிடம் போன்று எங்கு நோக்கினும் வானளாவும் உயர்ந்த கட்டிடங்கள் காணப் பெறுகின்றன.

கல்கத்தாவில் பல்வேறு மாநில மக்கள் குழுமிக் கிடக்கிறார்கள்; அவர்களைத் தொழில்களுக்கும் தரத்திற்கும் ஏற்ற முறையில் எளிதில் வகைப்படுத்திவிடலாம். பேனா பிடிக்கும் கணக்காயர்களில் பெரும்பாலோர் தமிழர்களாக இருக்கிறார்கள்; வாடகைக்கார், பஸ் முதலியவை ஓட்டும் பெரும்பாலோர் சர்தார்கள் என்று வழங்கப்பெறும் சீக்கியர்கள்; பாதுகாப்புத் துறையில் பணிபுரியும் போலீசுக்காரர்களில் பலர் பீகாரிகள்; அதேபோல் தெருக் கூட்டுவது முதலியவற்றை வங்காளிகள் கனவில்கூட நினைத்துப்பார்ப்பது இல்லையாம்; இத்தொழில்கள் பீகாரிகளுக்கே உரியனவாம்! இவற்றையெல்லாம் காணும்போது வங்காளிகள் மேட்டுக் குடியினராக, உயர்ந்த தட்டிலே இருப்பதாகத் தெரிகிறது.

பொதுவில் பல வங்காளிகள் மற்ற மாநில மொழியினரைக் காட்டிலும் தம் மொழியே தலைசிறந்தது என்று முழுக்க முழுக்க நம்புகிறார்கள்; வெளிப்படையாக வாதாடுகிறார்கள்; தற்போது தங்களிடம் தான் வளமார்ந்த இலக்கியங்கள் மண்டிக்கிடப்பதாகப் பெருமைப் படுகிறார்கள்.

வேறு எந்த மாநில மக்களைக் காட்டிலும் வங்காளிகள் தம் வங்க மொழியிடத்தில் பற்று மிகுந்தவராக இருக்கிறார்கள்; அவர்கள் காட்டும் இந்த மொழிப்பற்று, பலவிடங்களில் 'வெற்றி'யாகக் காட்சி

தருகிறது! எந்த ஒரு அந்நியனைக் கண்டாலும், ஒரு வங்காளி முதன்முதலில் தன்மொழியில்தான் பேசுகிறான்; தம் மாநிலத்தில்வந்து குடியேறுபவர்களையும் விரைவில் வங்க மொழியைத் தெரிந்து கொள்ளுமாறு வற்புறுத்துகிறான்!

நாம் சென்னை சைனா பசாரில் ஒருமுறை சென்றால் அங்கே முழுக்க முழுக்கக் கடைகளின் பெயர்ப் பலகைகள் யாவும் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைத்தான் காணமுடியும். ஆனால் மொழிப் பற்று ஊறிய வங்காளிகள் பெரிய பெரிய கடைகளின் பெயர்கள் யாவற்றையும் வங்கமொழியிலேயே அழகுபட எழுதிவைத்திருக்கிறார்கள்! பல்வேறு மொழிப்படங்கள் திரையிடப்பெறும் திரைப்பட அரங்குகளின் பெயர்களெல்லாம் வங்காளியில் மின்னுகின்றன!

தங்கள் தலைவர்களிடத்தில் வங்காளிகளுக்கு இருக்கும் பற்றுதல் வேறு எந்த மாநிலத்தவருக்கும் இருக்கமுடியாது, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழியே வங்க மண்ணில்தான் முகிழ்த்திருக்கவேண்டும். இல்லையெனின், காந்தியடிகளையும் சுபாஷ் சந்திரபோசையும் ஒப்பிட்டுப் பார்த்து, இருவரில் சுபாஷ்போசின் சிலைதான் நிறுவப்படவேண்டும் என்று ஒரு பெரும் கிளர்ச்சி செய்யமுடியுமா? சென்ற சில திங்கட்கு முன் அரசாங்கம் கல்கத்தா நகரத்தின் புகழ்பெற்ற நாற்சந்தியில் காந்தியடிகளின் சிலையை நிறுவ ஆவனசெய்தது; புகழ்பெற்ற வங்கச் சிற்பி தேவி பிரசாத் ராய் சௌத்திரி காந்தியடிகளின உருவத்திற்குச் சிலை அமைக்கத் தொடங்கினார்; இவர்தான்சென்னை மெரீனாவில் திறக்கப்பட்டுள்ள காந்தியாரின் சிலையைச் செய்தவர்.

தம் நாட்டுச் சிற்பியின் கைவண்ணம் காந்தியடிகளின் சிலையில் வெளிப்படுவதை மட்டும் கொண்டு வங்காளிகள் ஆறுதல் கொள்ளவில்லை, தம் தலைவன் சுபாஷ் போசின் சிலைதான் காந்தியடிகளின் சிலைக்குப் பதிலாக நிறுவப்பட்டாகவேண்டும் என்று ஒரு பெரும் போராட்டமே தொடங்கினார்கள். அரசாங்கம் போராட்டக்காரர்களை ஒடுக்க முனைந்தது; ஆனால் சிலையைச் செதுக்கிக் கொண்டிருந்த தேவி பிரசாத ராய் தன் பணியைத் தொடர முடியாமல், மக்கள் கற்களை வீசியும் ஆரவாரம் செய்தும் தொல்லை கொடுத்தார்கள். இறுதியில் எப்படியோ மிக்க பாதுகாவலுடன் காந்தியாரின் சிலை நிறுவப்பட்டுள்ளது; ஆனால் எந்த நேரத்திலும் அந்தச் சிலைக்கு ஆபத்து நேரலாம் என்று சொல்கிறார்கள்; தம் தலைவன் ஒருவன் பெயர் மறைக்கப்படுவதை வங்க மக்கள் எதிர்த்துப் புரட்சி செய்கிறார்கள்; ஆனால் தமிழக மக்களோ தம் தாயகத்தின் பெயரைத் 'தமிழ்நாடு' என்று அழைக்கவும் ஆண்மையற்று கோழைகளாய் முடங்கிக் கிடப்பதை நினைத்துத் தலை தாழ்த்திக் கொண்டேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்லாமல், தென் ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகம் வங்க மண்ணில் இருக்கிறது. அரசாங்கம் ஏற்று நடத்தும் அந்நூலகத்தின் ஒவ்வொரு பகுதியும் அமைப்பும் நம் கண்களை விரியச் செய்கின்றன. மாடியிலிருக்கும் நூல்களைக் கீழே இருப்பவர் எளிதாகப் பெறவும், மாடியில் இருப்பவர் கீழே இருக்கும் நூல்களை எளிதாகப் பெறவும். 'லிப்டு' வசதிகள் செய்யப்பட்டுள்ளன. உலக மொழிகளின் நூல்களெல்லாம் அங்கே குவித்து வைக்கப்பட்டுள்ளன. அதிலே பணிபுரிபவர் மட்டும் முந்நூறு பேருக்குமேல் உள்ளனர். அதில் உள்ள நூல்களை அடுத்தடுத்து அடுக்கி வைத்தால் 11 கல் தொலைவு வரும் என்று நண்பர்கள் சொன்ன நேரத்தில் வியப்பு எங்கள் மூச்சையடைத்தது. தமிழ் நூல்கள் மட்டுமே 5,000க்கு மேற்பட்டவை உள்ளன; தமிழ்ப் பகுதியில் பணிபுரியும் சாரி என்னும் ஆர்வ உள்ளம் படைத்தவர் பெரும் திட்டமுடன் தமிழ்நூற் பட்டியில் ஒன்று ஆக்கி வருகிறார். நூல்கள் குழுமியிருப்பது போன்று படிப்போரின் தொகையும் மிகுதியாக உள்ளது. மொத்தத்தில் இப்படியொரு நூலகம் 'தமிழக'த்தில் இருந்தால் எத்தனை நலமாக இருக்கும் என்று என் பேதை நெஞ்சம் எண்ணி எண்ணி ஏங்கியது.

கல்கத்தாவில் தமிழர்கள் மிகுதியாகக் குழுமியுள்ள பகுதி 'ஏரி வட்டம்' (Lake area) என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் வாழும் வங்க வணிகர் சிலர் தமிழைக் கொலைசெய்து பேசுவதைக் காணமுடியும். இப்பகுதியைச் சுற்றி அமைந்துள்ள நீண்ட 'தாகூரியா ஏரி'யின் அற்புதக் காட்சி என்றென்றும் நெஞ்சத்தைவிட்டு அகல முடியாது. அதன் அருகே சென்றபோது, அவ் ஏரியில் மீன்கள் மிகுதியா, நீர் மிகுதியா என்ற ஐயப்பாடு எழுகிறது. ஏராளமான இராட்சச சேல் மீன்கள் கொஞ்சமும் அச்சமின்றி நீர்ப்பரப்பில் வந்து மேய்கின்றன; உடலை வளைத்தும் நெளித்தும் பாய்ந்தோடும் நீண்ட வரால்களும் காணாத காட்சியாக உள்ளன; இவற்றைக் கண்டபோது தென் பாண்டி வேந்தரின் கொடி நினைவுக்கு வந்தது.

கூட்டம் கூட்டமாகத் தம் குஞ்சுகளை அழைத்து வந்து அவ்வரால்கள் உணவு தேடும் காட்சி பார்ப்பவர்களை நின்றவிடத்திலேயே நிற்க வைக்கிறது. இந்த ஏரியில் எக்காலத்தும் மீன்கள் பிடிக்கப்படுவதில்லையாம்! அதற்குப் பதிலாக மாலை தொடங்கியதும், சென்னைக் கடற்கரையில் கூடுவதுபோல, மக்கள் கூட்டம் கூடுகிறது; அவர்கள் அம்மீன்களுக்கு உணவு இட்டு, அக்காட்சியைக் கண்டு மகிழ்வதை நாம் நித்தமும் காண முடிகிறது. ஒவ்வொரு வங்காளியும் இம் மீன் காட்சியைக் கண்டு தன் காலத்தையும் சிந்தையையும் இழப்பது நமக்கு விந்தை தருவதாக உள்ளது!

வங்காளிகளுக்கு மீன் உணவில் உள்ள சுவை உலகத்தில் வேறு எந்தப் பொருள்களிலும் இல்லையாம்! நம் வீட்டுக்கு விருந்தாளி வந்தால், 'வீட்டில் உப்புமில்லை, பருப்புமில்லை' என்றுகூறுகிறோம். ஆனால் விருந்தாளிகள் வந்த நேரத்தில் வங்காளிகள், "என்ன செய்வது? வீட்டில் ஒரு மீன்குஞ்சு கூட இல்லையே!" என்று சொல்கிறார்கள்! "பருப்பில்லாத கலியாணமா?" என்று நாம் வழங்கும்

எங்கெல்லாம் நிலைமை வேகமாக மாறுகிறதோ அங்கெல்லாம் நிலைமையின் வேகத்திற்கேற்ப நம்மை நாம் சரிபடுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நாம் பின் தங்கி விடுவோம் அல்லது நம்மை மீறி செயல்கள் நடந்துவிடும்.

பழமொழி, அங்கே, "மீன் இல்லாத கலியாணமா?" என்று மாற்றி வழங்கப் பெறுகிறது! மக்கள் கூட்டம் எந்த நேரமும் கூடிநிற்கும் ஓர் இடம் மீன் விற்பனை நிலையமென்று துணிந்து கூறலாம்!

கல்கத்தா நகரின் ஒதுக்குப் புறங்களில் உள்ள குட்டைகளிலும் குளங்களிலும் எந்த நேரமும் ஆண்களும் பெண்களும் சேற்றில் விழுந்து மீன்பிடிப்பதைக் கண்டோம்; பல சிற்றூர்களின் வழியாக புகைவண்டி சென்றபோது, பலப்பல வகை வலைகளைக் கொண்டு, மீன்பிடி தொழில் நடைபெறுவதைக் காண முடிந்தது; வங்க மண்ணின் சிற்றூர்களில் மீன் பிடித்தல்தான் குடிசைத் தொழிலோ என்று நம்புமளவுக்கு, இத்தொழில் நடைபெறுகிறது.

வட கல்கத்தாவிலும் தட்சணேஸ்வர் பகுதிகளிலும் இடிந்த வீடுகளும் அழுக்கேறிய தெருக்களும் சுகாதாரமற்ற பகுதிகளும் காணப்பெற்றாலும், கல்கத்தா மாநகராட்சி மன்றத்தின் நடவடிக்கைகள், நகரை ஓரளவு அழகு படுத்தியுள்ளன. ஏரிவட்டப் பகுதியில் அமைந்துள்ள 'லில்லிபூல்' என்ற பூங்கா ஒன்றே அவர்களின் சிறப்பான செயல்முறைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது. ஆங்கு குடும்பத்துடன் வருபவர்கள் தனித்தனியே கண்டு மகிழ்வதற்குரிய எழில்மிகு காட்சிகள்பலஉள்ளன; வண்ணப் பூங்காவும், நீரை வாரியூற்றும் நீர் ஊற்றும் வகை வகையான பறவைகளும் எல்லோரின் நெஞ்சத்தையும் இழுக்கின்றன. குழந்தைகள் மட்டுமே விளையாடுவதற்கென்று பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று புல் நிறைந்த பகுதி உள்ளது; ஆங்காங்கே வண்ணக்கிளிகளும், மயிலும், சிட்டும் பூங்காவில் உயிர்க் காட்சிச்சாலையை நினைவுபடுத்துகின்றன. இதே போன்று வேறு சில பூங்காக்களும் உள்ளதாக நண்பர்கள் கூறினர்.

கல்கத்தா மாநகரத் தொல் பொருட்காட்சிச்சாலை மிக அருமையான முறையில் அமைந்து, கடந்த கால நிகழ்ச்சிகளைக் கதைகதையாகக் கூறிக்கொண்டிருக்கிறது. அதன்கண் அமைக்கப்பட்டுள்ள புத்தர் உருவங்களும் போதி சத்வர்களின் சிலைகளும் அந்தக்கால அசோகனின் ஆட்சியை நினைவூட்டுகின்றன.

எனினும் ஆங்காங்கு தமிழகத்தில் ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பெற்ற புதை பொருள்களும், ஜான்மார்ஷல் அவர்களால் கண்டெடுக்கப்பெற்று, மறைந்த திராவிட நாகரிகத்தை வெளிச்சமிட்டுக் காட்டும் மொகஞ்சதாரோ' ஆரப்பா புதைப்பொருட்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இப்பொருட் காட்சிச்சாலைக்கு மதுரையினின்றும் மகாபலிபுரத்தினின்றும் கொண்டு செல்லப்பட்ட சிலைகளும் சிற்பங்களும் தமிழகத்தின் கலைப் பெருமையை வடநாட்டவர்க்குச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கின்றன. மொகலாய, இராசபுத்திர மன்னர் காலத்தை அறியத் தனிப்பகுதியே ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் பெரும் விரிவுகொண்ட கல்கத்தா தொல் பொருட்காட்சிச் சாலை வங்கம் செல்வோர் ஒவ்வொருவரும் காணத்தக்க முறையில் அமைந்துள்ளது.

இப்பொருட்காட்சிச்சாலைக்குஎதிரில் அமைந்துள்ள விக்டோரியா நினைவு மாளிகை, பளிங்குபோல் மிளிரும் சலவைக் கற்களால் ஆன அழகு மாளிகையாகக் காட்சி தருகிறது; இதன் வெளித்தோற்றமே நமக்கு உள்ளே நுழைந்து காண வேண்டுமென்ற பேராவலைத் தூண்டுகிறது. அரசி விக்டோரியாவின் காலத்தில்தான் இங்கிலாந்து பொற்காலத்தில் திகழ்ந்தது என்று வரலாறு கூறுகின்றது. இதேபோல் விக்டோரியா நினைவு மாளிகையும் தனிப்பெரும் அமைப்புடன் எழில் ஒழுக நிற்கிறது. அதனுள் நுழைந்து வெளிவருவோர் கடந்த 250 ஆண்டுகளில் இந்தியாவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் முழுக்க முழுக்க நினைவுக்குக்கொண்டுவரமுடிகிறது. காலத்திற்குக் காலம் பதவிக்கு வந்த வைஸ்ராய்கள், கவர்னர்கள், அவர்கள் நடத்திய போர்கள் ஆகியவற்றின் ஓவியங்களையும் சிற்பங்களையும் ஒழுங்குபட அமைத்திருக்கிறார்கள். சென்னைப் பெருவீதிகளில் ஆங்காங்கே இன்னும் ஆங்கிலேயர்களின் சிலைகள் அமைந்துள்ளன; கல்கத்தாவிலோ ஆங்கிலேயரின் ஆதிக்க வரலாற்றைக் காட்டும் பெரும் மாளிகையே அமைந்துள்ளது!

வங்காளிகளின் கடவுள் வழிபாட்டைக் கேட்டபோது எங்களை யாரோ நெருப்பில் தூக்கி எறிவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது! வங்காளிகளுடன் தமிழர்களை ஒப்பிடும்போது, வழிபாட்டுத்துறையிலும் நம் தமிழினம் எத்தனையோ படி உயர்ந்து நிற்பதைக் காண முடிகிறது; இதற்கு ஒரே எடுத்துக்காட்டு, நித்தம் நித்தம் கோரவழிபாடு நிகழும் 'காளிகாட்' ஆலயமாகும்.

[அடுத்த இதழில் முடியும்]

'யோகம்' அடிக்கிறது!

யோகம் பற்றிச் சொல்லிக் கொடுப்பதற்காக, காஷ்மீரில், ஒரு கழகம் துவக்கப்படவிருக்கிறது.

சுவாமி திரேர்ந்திர பிரம்மச்சாரி என்பவர், இம் முயற்சியெடுத்திருக்கிறார்.

நேரு, இந்திரா, மொராஜ்தேசாய், செகசீவன்ராம், செயப்பிரகாஷ் நாராயண் முதலியோர், இவரிடம், யோகாசனங்கள் கற்றுக் கொண்ட சீடர்களாம்.

அமைக்கப்படவிருக்கும் கழகத்துக்கு 10 இலட்சம் திட்டமாம். இதில் 5 இலட்சத்தை அள்ளித்தரவிருக்கிறது டில்லி!!

★